# சுதந்திரப் பறவைகள்

பறவை 09 | பாடல் 04 | 1994 வைகாசி | அன்பளிப்பு ரூபா 5.00


# சீதனக் கொடுமையை எதிர்த்து

## தமிழீழமெங்கும் பிரச்சார இயக்கம்

தமிழீழத்தின் சகல பகுதிகளிலும் இருமாதங்கள் தொடர்ச்சியான சீதன ஒழிப்புப் பிரச்சாரம் நடைபெறவுள்ளது. கோட்ட ரீதியாக நடைபெறும் இச்சீதன ஒழிப்புப் பிரச்சாரத்தில் விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர் ஈடுபடவுள்ளனர். ஆண் பெண் போராளிகள் கலந்து கொண்டு, எமது சமூகத்தின் சாபக்கேடுபோல இன்னும் பீடித்துள்ள இச்சீதனக் கொடுமையை ஒழிப்பதற்கு தீவிர பிரச்சாரத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இச்சீதன ஒழிப்புப்பிரச்சாரமானது சீதனம்பற்றிய பொதுமக்களது கருத்துக்களைப் பெறும் நோக்குடனும் அவர்களது ஒத்துழைப்பை வேண்டியும் நடாத்தப்படவுள்ளது.

நாம் சீதனத்தை ஒழிப்பதில் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளோம். எமது போராட்டம் தேசிய விடுதலையோடு இணைந்த சமூகவிடுதலையை வென்றெடுப்பதை நோக்கமாகக் கொண்டது. சமூகவிடுதலையின் அங்கமாக பெண் விடுதலை அமைகிறது. எனவே பெண்ணின் விடுதலை நோக்கிய பாதையில் பெண்ணினது தனித்துவம், கௌரவம் என்பன பேணப்பட வேண்டும். இதன் மூலமே சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் காணமுடியும்.

இவ்வாரம் ஆரம்பமாகவுள்ள இப்பிரச்சாரக்களத்தில் தமிழீழத்தின் சகல வெகுசனத் தொடர்புச்சாதனங்களும் கருத்துக் களைப் பரிமாற்றம் செய்யவுள்ளன. கோட்ட ரீதியாக மாவட்டரீதியாக நடைபெறவுள்ள இப்பிரச்சார நடவடிக்கையில் கருத்தரங்குகள், விவாதமேடைகள், கலை நிகழ்வுகள், சுவரொட்டிகள் என்பனவற்றின்மூலம் கருத்துக்கள் பரப்பப்படவுள்ளன.

இச்சீதன ஒழிப்பு நடவடிக்கையின் சட்டச்சிக்கல்கள் என்ன? இதனை நடைமுறைப் படுத்துவதில் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகள் என்ன? என்பதுபற்றி பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் வேண்டி நிற்கின்றோம்.

பெண்கள் பாரியளவிற் பாதிக்கப்படும் இப்பிரச்சனையைப் புரிந்துகொண்டு இப் பிரச்சாரக் களத்தில் கூடுதலான பெண்கள் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கி, இந்நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம்,



மேதின ஊர்வலத்தின்போது அணிதிரண்டு செல்லும் மக்களின் ஒரு பகுதியினரைப் படத்திற் காணலாம்.



உள்ளே


★ நாம் கடந்து வந்த பாதை
★ விடிவெள்ளி
உழைக்கும் பெண்களின் நம்பிக்கை ஒளி
★ சீதனமும் தேசவழமைச்சட்டமும்.
★ தமிழீழ சட்டக் கோவை
பெண்களின் உரிமைகளை எப்படிப் பாதுகாக்கின்றது.
★ 'நிமிர்வு'
★ நாட்டின் நற்குடிகளை உருவாக்கும் பாலர் கல்வி.
★ 'சிறையிலிருக்கும் தோழிக்கு'



விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் அதிகாரபூர்வ ஏடு

எங்கள் பார்வையில்....

# உழைக்கும் பெண்கள் உரத்த குரல் எழுப்பவேண்டும்!

உலகிலுள்ள ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களெல்லாம் என்று தம் உரிமைக்காக ஒன்று திரண்டு எழுந்து முதலாளி வர்க்கத்தை நோக்கிக் குரலெழுப்பினார்களோ, அன்றிலிருந்து உலகில் உழைப்பாளர்களுக்கென ஒரு நாள் பிறந்தது.

மே 1.
உலக உழைப்பாளர் நாள்.

இந்த நாள் ஏறத்தாழ 108 வருடங்களாகக் கைக்கொள்ளப்பட்டு வருகின்றது. உழைப்பாளர்களின் பல உரிமைகள் இன்று வென்றெடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுபட்ட தொழிலாளர்களின் குரல் எத்துணை வலுவானது என்பதை மே 1 நமக்கு நன்கு நினைவுபடுத்துகின்றது.

அனைத்துலகப் பெண்கள் நாள்கூட, ஒரு நெசவுத் தொழிற்சாலையின் பெண் உழைப்பாளர்கள் தமது உரிமைகளைக் கேட்டுக் கிளர்ந்தபொழுதுதான் பிறந்தது. அவர்கள் தமது வேலை நேரம் எட்டு மணி நேரமாக்கப்படவேண்டும் என்று கிளர்ந்ததைத் தொடர்ந்து, பல பெண்களும் பெண்கள் அமைப்புகளும் எழுச்சிகொண்டு எழுந்து, பெண்களுக்கென ஒரு நாளைப் பிரகடனப்படுத்தினர். ஆனால் உலக உழைப்பாளர் நாள், உழைக்கும் பெண்களின் எழுச்சியால் உண்டான அனைத்துலகப் பெண்கள் நாள் என்பன உருவாகி, இன்று பல்லாண்டுகள் ஆகிவிட்டன. எனினும் உழைக்கும் பெண்களின் உரிமைகள் அவர்களுக்கு முழுமையாக வழங்கப்பட்டிருக்கிறதா என்றால், 'இல்லை' என்றுதான் பதில் சொல்ல வேண்டும்.

காலங் காலமாக உலகம் முழுவதிலுமே பெண்கள் இரண்டாம் தரக்குடிகளாகத்தான்கருதப்பட்டு வந்திருக்கின்றார்கள்; வருகின்றார்கள். உழைப்பாளர்களின் உரிமைகள் வழங்கப்பட்டுவிட்டன என்று சொல்கின்ற பல பேர், உழைப்பில் ஈடுபடும் பெண்களின் உரிமைகளைக் கருத்தில் எடுப்பதில்லை.

தமிழீழத்தில் தற்போது ஆண்களின் எண்ணிக்கையைவிடப் பெண்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால், உழைப்பில் ஈடுபடுகின்ற (பிரதானமாக கூலித் தொழில், வியாபார நிலையங்கள் அச்சுக்கூடங்கள், பாலர் பாடசாலைகள்) பெண்களின் எண்ணிக்கையும் அதிகம். பெண் உழைப்பாளர்கள் பெரும்பான்மையினராக இருந்தபோதிலும் அவர்கள் தமது உழைப்புக்கு ஏற்ற ஊதியத்தைப் பெறுவதில்லை; ஓய்வைப் பெறுவதில்லை; சலுகைகளைப் பெறுவதில்லை.

வேலை செய்யும் இடங்களில், பெறுகின்ற ஊதியத்துக்கு மேலான சேவையை வழங்குகின்ற இவர்கள் வீட்டிலாவது உரிமைகளோடு வாழ்கின்றார்களா என்றால், அதுவும் இல்லை. வீட்டிலே ஊதியத்தையே எதிர்பாராது பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான வேலைகளைப் பெண்கள் செய்கின்றார்கள். ஒரு குடும்பத்துக்குரிய வேலைகள் என்பவை யாரிடமுமிருந்தும் ஊதியத்தை எதிர்பார்த்துச் செய்யப்படுபவை அல்ல. அது அன்புணர்வுடன் பெண்-ஆண் இருபாலாராலும் இணைந்து செய்யப்படவேண்டியவை. ஆனால் இங்கே குடும்ப வேலைச் சுமைக்குள்ளே அமுக்கப்படுவது பெண்கள்தான். குடும்பத்துக்காகப் பலனை எதிர்பாராது உழைக்கும் பெண்களின் உரிமைகள் கௌரவிக்கப்படுவதில்லை; குடும்பத்தை நடத்துவதற்காக வெளியே ஊதியத்துக்காக உழைக்கும் பெண்களின் உரிமைகளும் கௌரவிக்கப்படுவதில்லை.

மொத்தத்தில் பார்க்கப்போனால் உலக உழைப்பாளர் நாளில் தமது உரிமைகளுக்காக எல்லோரையும்விட உரத்த குரல் எழுப்ப வேண்டியது பெண்கள்தான். தாம் ஒடுக்கப்படுகின்றோம் என்பதைப் பெண்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்; தமது உரிமைகள் நசுக்கப்படுகின்றன என்பதைப் பெண்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

தமது பிரச்சினைகள் என்ன என்பதைப் புரிந்துகொண்டு உலக உழைப்பாளர் நாளைப் பெண்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தவேண்டும்.

## ஒவ்வொருவனும் தனக்குத்தானே விதி

"இந்தப்பொறிகள் எங்கிருந்து வருகின்றன?" என்று கிழவியிடம் வினாவினேன். இந்தப் பொறிகள் தோன்றியதைப்பற்றி முன்பே ஏதோ கேள்விப்பட்டிருந்தேன். ஆயினும் இஸேர்கில் கிழவி அவை சம்பந்தமாக என்ன சொல்கிறாள் என்று கேட்க விரும்பினேன்.

அவள் சொல்லலானாள்.

" இந்தப் பொறிகள் தான்கோவின் எரியும் இதயத்திலிருந்து கிளம்புகின்றன. முன் ஒரு காலத்தில் ஓர் இதயம் இருந்தது. ஒரு சமயம் அது குப்பென்று மூண்டு எரிந்தது... அதிலிருந்தது கிளம்பியவையேஇந்தப்பொறிகள்... அந்தக் கதையை உனக்குச் சொல்லுகிறேன்.... இதுவும் பழைய கதைதான்... பழையது, எல்லாம் பழையவை! பழங்காலத்தில் எத்தனை விஷயங்கள் நிகழ்ந்தன பார்! இப்போதெல்லாம் அந்தமாதிரி ஒன்றுமே செயல்களோ, மனிதர்களோ, கதைகளோ எதுவுமே- கிடையாது'... ஏன்? .. சொல்லேன் கேட்போம். சொல்ல முடியாது உன்னால் என்ன தெரியும் உனக்கு. வாலிபர்களான நீங்கள் எல்லோருமே என்னத்தைக் கண்டீர்கள்? ஹெஹ் ஹெஹ்ஹே! பழங்காலத்தைக் கூர்ந்து கவனிப்பீர்கள் என்றால், எல்லாப் புதிர்களுக்கும் விடை கிடைத்துவிடும். .. நீங்கள் கவனிப்பதில்லை, அதனால்தான் வாழத் தெரியாதவர்களாயிருக்கிறீர்கள் .. நான் வாழ்க்கையைப் பார்க்கவில்லையா என்ன? பார்வை மந்தமாகிவிட்ட போதிலும் நான் எல்லாவற்றையுந்தான் கவனிக்கிறேன்! மக்கள் வாழவில்லை, பிழைப்புக்காகப் பாடுபடுகிறார்கள், இந்தப் பாட்டிற்கே வாழ்வை அர்ப்பணித்து விடுகிறார்கள். தங்கள் நலன்களை எல்லாம் தாங்களே சூறையாடி, தங்கள் பொழுதை எல்லாம் வீணடித்த பிறகு விதியை நொந்து கொள்ளத் தொடங்குகிறார்கள். விதியாவது விதி! இதற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்? ஒவ்வொருவனும் தனக்குத்தானே விதி!

*மக்ஸிம் கார்க்கியின்*
*தேர்ந்தெடுத்த கதைகளிலிருந்து'*

ஆண்வழிச் சொத்துரிமை என சட்ட ரீதியாகப் பெண்கள் ஒதுக்கப்படுகின்றனர். குடும்பத்தின் தேவைகளைச் சமாளிப்பவர் குடும்பம் என்பது உற்பத்தி, நுகர்வின் அமைப்பு எனக் கூறிப் பொருளாதார ரீதியாக அடக்கப்படுகின்றனர். சமூக அரசியல் வாழ்வில் பங்குபற்றுவதைத்தடை செய்வதுபோல வீட்டுக்குரியவள் என தனிச்சொத்தாகப் புறக்கணிக்கப்பட்டு சமூக ரீதியாகவும் பெண் ஒதுக்கப்படுகிறாள்.

*— எல்சல்வடோர் மாதர்சங்க அறிக்கையிலிருந்து*

★ ★ ★

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த அண்ட்ரூ ஜாக்சன் அவர்களுக்கு அவருடைய மனைவி செய்த உதவி மகத்தானது. திருமணத்திற்குமுன் அவர் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தார்.

அவருக்கு கல்வி போதித்து அவரை அமெரிக்க ஜனாதிபதியாக வரச் செய்ததே அவரது மனைவிதான்.

விண்வெளியில் பறந்த முதல் பெண்மணி வாலண்டினா தெரஷ்கோவா ஆவார். இந்த ரஷ்ய வீராங்கனை விண்வெளியில் 48 முறை வலம்வந்து சாதனை புரிந்துள்ளார்.

தகவல்: **மலர்மல்லிகை**

★ ★ ★

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# நாம் கடந்து வந்த பாதை

ரதி

விடுதலை, இது எங்கள் அனைவருடைய சுயமான சொத்து. விடுதலையை விலை கொடுத்து வாங்க முடியாது. யாரும் விடுதலையைப்பெற்றும் தரமாட்டார்கள். நாங்கள்தான் எங்களுக்கான விடுதலையைப் பெற்றெடுக்க வேண்டும். எவ்வளவு துன்பங்கள், துயரங்கள், இன்னல்கள், இடர்கள் வந்தாலும் அவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து எம்மண்ணை மீட்டு விடுதலையை வென்றெடுக்க வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டமானது பல சோகங்களைத் தாங்கி, பல துன்பங்களைச் சுமந்து பல தடைகளைத்தாண்டி வந்துள்ளது. இந்த வகையிலே... -

1987- ல் அமைதி காக்கப்போகின்றோம் எனக் கூறிக்கொண்டு இந்தியப் படைகள் தமிழீழத்தில் நுழைந்தது. தமிழீழ வீதிகளெல்லாம் படைகள்வீதி வலம் வர, இனிமேல் எங்களுக்கு இலங்கைப்படையால் அழிவேயில்லை என்ற நினைவோடு இந்தியப்படையைக் கையசைத்து வரவேற்றார்கள் எம் மக்கள்.

தமிழீழத்தில் ஆங்காங்கே தளங்களை அமைத்து இந்தியப்படைகள் தங்கியிருந்து '' நாங்கள் தமிழர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றோம்.'' எனக்கூறி எம்மக்களையே சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

நாங்கள் போராளிகள். அந்த நேரத்தில் வெளியில் செல்லும் போது சாதாரண மக்களாக உடையணிந்து தான் செல்வோம். ஒரு நாள் நானும் 2ம்லெப். மாலதியும் சாவகச்சேரியில் இருந்து மிருசுவிலுக்குச் சென்று கொண்டிருந்தோம். இடையில் கொடிகாமத்தில் இந்தியப்படைகள் தம் தளத்தின் முன் எல்லோரையும் நிறுத்திச் சோதனை செய்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள். நாங்களும் மிதி வண்டியிலிருந்து இறங்கிச் சென்று அவர்களின் முன்னால் நின்றோம். ''பொண்ணுக்கு என்ன பெயரு? எங்கபோறது?'' எனக் கேட்டதற்குப் பதில் அளித்தோம். ''சரிபோங்கோ'' என்றான். சிறிது தூரம் சென்றதும் ''பொண்ணுங்களா பொண்ணுங்களா'' எனக்குரல் கொடுத்து கையசைத்து நிற்கச் சொன்னான் ஒரு சிப்பாய். உடனே நாங்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தோம். 'ஏன் நிற்கச் சொல்கின்றான்' என்ற அர்த்தத்தோடு மாலதி எனக்கு மட்டும் விளங்கக் கூடியதாகப் பார்த்தாள். 'நாசமாய் போவாங்கள். இன்னும் என்ன கேட்கப் போறாங்களோ. வாறான். வரட்டும் பார்ப்போம்' என துணிவோடு நின்றோம். நிற்கச் சொன்னவன் வந்தான். வந்தவன் சொன்னான், ''பொண்ணுங்களா எங்கடை கொமாண்டர் சரியான பொம்பிளைக் கள்ளன். இனிமேல் நீங்கள் இதாலை வரேக்கை நீளமான ஆடை உடுத்திக் கிட்டு வாங்க'' என்றான். (நாங்கள் முழங்கால் வரையிலான பாவாடை சட்டைகள் அணிந்திருந்தோம். அந்த இராணுவத்தினன் எம்மை இந்தியப் பெண்கள் போல் பாதம் வரையில் ஆடை அணியச் சொன்னான்.) ''ஆமாங்க'' என நையாண்டியாக பதிலளித்தோம். நான் மனதுக்குள் '' இவங்கள் தமிழீழத்தில அமைதி காக்க வரவில்லை. தமிழ் மக்களை அழிக்க வந்திருக்கிறாங்கள்' என்று எண்ணிக்கொண்டேன்.

ஈழமண்ணில் இந்தியப்படை கால்வைத்த மூன்று மாதங்களிலேயே அவர்களின் அடாவடித்தனங்களும் அட்டகாசங்களும், காட்டுமிராண்டித்தனங்களும் கோரமான கருநாகம் போல் படமெடுத்து ஆடத் தொடங்கின. இந்தியா தனது உண்மைஉருவை எமக்குத் தெளிவாகக் காட்டியது. எமக்கும் இந்தியாவுக்கும் இடையில் போர் மூளும் சூழ்நிலை உருவானது. '' இந்தப் பெரிய வல்லரசோடு விடுதலைப் புலிகள் என்னண்டு அடிபடப்போறாங்கள்?'' என்று எண்ணி எல்லோரும் வாய் பிளந்து நிற்க ''எந்தப் பெரிய வல்லரசு வந்தால் என்ன? எமக்கு இருக்கும் மனோபலமே மிகப் பெரிய சக்தி. எம்மண்ணில் இருந்து அந்நியனை விரட்டியடிப்போம். புறப்படுங்கள்'' என முழங்கிய எங்களின் தலைவரின் குரல் கேட்டு, இந்தியனை எம்மண்ணை விட்டு விரட்டியடிக்கும் பணியில் ஈடுபட்டோம்.



யாழ். குடாநாட்டில் பரவலாக இந்திய இராணுவத்துடனான மோதல்கள் நடந்துகொண்டிருந்தன. பெண்கள் அணியும் இந்திய இராணுவத்துக்கு எதிராகத் தாக்குதல்களை நடாத்திக்கொண்டிருந்தது. எமது அணி கல்லுண்டாய், வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், தொட்டிலடி, பொன்னாலை, மாசியப்பிட்டி ஆகியபகுதிகளில் இந்திய இராணுவத்தைத் தாக்கிக் கொண்டிருந்தது.

மேலே பிரசுரிக்கப்பட்டுள்ள படம், சித்தங்கேணியில் இந்திய இராணுவத்தினரின் கவசவாகனம் எம்மால் தகர்க்கப்பட்ட தாக்குதலின்போது எடுக்கப்பட்டது.

யாழ் குடா நாட்டில் பரவலாக இந்திய இராணுவத்துடனானமோதல்கள் நடந்து கொண்டிருந்தன. எமது பெண்கள் அணியும் இந்திய இராணுவத்துக்கெதிராக எதிர்த்தாக்குதல்கள் நடாத்திக் கொண்டிருந்தது. எமது அணி கல்லுண்டாய், வட்டுக்கோட்டை, சித்தங்கேணி, சங்கானை, சண்டிலிப்பாய், தொட்டிலடி, பொன்னாலை, மாசியப்பிட்டி ஆகிய பகுதிகளில் இந்திய இராணுவத்தை தாக்கிக் கொண்டிருந்தது.

இந்தச் சண்டைகளின் போதுநாம் பெரும் போர் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டோம். எப்படியெனில், மழை கொட்டக் கொட்ட மழைக் கவசங்களை அணிந்தவாறு இந்திய இராணுவத்தினர் முன்னேறி வருவார்கள். நாங்கள் மழையில் தோய்ந்து கொண்டே எதிர்த்தாக்குதலில் ஈடுபடுவோம். தொடர்ச்சியாக மழையில் நனைந்து கொண்டே இந்தியத் துருப்புக்களை எதிர்ப்போம். உடலெல்லாம் விறைத்துப்போய் வெளுப்பு நிறமாக இருக்கும். ஒழுங்காக உணவும் கிடைப்பதில்லை. ஆனால் எங்களின் கரங்கள் துப்பாக்கியை இறுக்கிப் பிடித்து இருக்கும். அந்நியனை எங்கள் மண்ணில் இருந்து துரத்தியடிக்கும் வரை எந்த இடர் எங்களுக்கு வந்தாலும் நாங்கள் சோரவே மாட்டோம் என எங்களது மனங்கள் உறுதியாக இருந்தன.

நாலா திசையும் இந்தியத் துருப்புக்கள் கட்டெறும்புகள் மாதிரி பரவி வந்து கொண்டிருந்தன. இந்திய இராணுவத்திடமிருந்து ஒரு வித்தியாசமான வாடை வீசும். அந்த வாடை வீசினால், அவர்கள் வருகிறார்கள் என்று அறிவோம். நாங்கள் நாலா திசையும் ஓடி ஓடி சண்டையைத் தொடுத்தோம். குளித்து எத்தனையோ நாட்களாக இருக்கும். தொடர்ச்சியாக ஒரே உடைகளையே அணிந்தோம். அழுக்கு என்று சொல்வதை விட அதற்கு மேலாக ஒருசொல் இருந்தால், அதைச் சொல்லலாம். கால்களில் செருப்புக்கூட இல்லை. வீதிகளில் இருந்த கல்லும், முள்ளும் வேலிகளில் இருந்த வடலிமட்டையின் கருக்குகளும் எங்களின் கால்களை வஞ்சமில்லாமல் பதம் பார்த்து ஏறிக் கொள்ளும்; கீறிக்கொள்ளும். அதோடு பசியும் எங்களை வாட்டும். ஆனாலும் போரில் சளைக்காமல் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருந்தோம்.

பொன்னாலையில் நின்றபோது ஒரு நாள் எங்களுக்குச் சரியாகப் பசித்தது. மேஜர் சோதியாக்காவிடம் போய், ''அக்கா, எங்கையாவது கோழி வாங்கிவாறம். எங்களுக்கு கால்காலாக வெட்டி அவிச்சு தாங்கோ'' என்றோம். நாம் மிகுந்த பசியுடன் கெஞ்சிக்கேட்டதைப்பரிதாபமாகப் பார்த்த சோதியாக்கா "ஓம்'' என்றார். பின் கோழிகளை வாங்கி வந்து கொடுத்தோம். சோதியாக்கா உப்பும் தூளும் போட்டு கோழியை அவித்துக் கொண்டிருந்தார். நான் காவற்கடமையில் நின்றேன். அந்நேரம் பெரும் மழையும் பெய்து கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் பூவரச வேலி அருகில் ஏதோ சத்தம் கேட்க, நான் கூர்ந்து கவனித்தேன். ஏறத்தாழ இருபது யார் தூரத்தில் இந்திய இராணுவம். உடனே என் ஆயுதம் ரவைகளைக் கக்கியது. உள்ளே பசியோடு இருந்த என் சகதோழிகள் இந்திய இராணுவம் வந்ததை உணர்ந்து கொண்டு வெளியே ஓடி வந்தார்கள். வெளியிலே வரும் போது ஒவ்வொருவருடைய கைகளிலும் அவித்ததும், அவியாததுமாக ஒவ்வொரு கோழிக்கால்கள் இருந்தன. எனக்கு அந்த இக்கட்டான நேரத்திலும் சிரிப்பு வந்து விட்டது. சிரித்து விட்டேன். என் சகதோழி என்னிடமும் ஒரு கோழிக்காலைத் தந்தாள். சண்டை ஓய்ந்ததும்கோழிக்கால்களை சாப்பிட்டுப் பசியாறினோம். ஒரு கையில் கோழிக்காலும், மறு கையில் துப்பாக்கியுமாக நாம் ஓடி வந்த அழகை எண்ணி நாமே சிரித்துக் கொண்டோம்.

இந்தியத்துருப்புகளின் ஏராளமான தாக்குதல்களை எதிர்கொண்டு பதிலடி கொடுத்தோம். அவற்றுள் லெப். கேணல். ஜொனி அண்ணாவின் தலைமையில் நடந்த கல்லுண்டாய் வெளிச் சமர் எமக்குப் பெரிய அனுபவத்தைத் தந்தது. அத்தோடு இந்திய இராணுவத்துக்கு எதிரான மிக முக்கியமான தாக்குதல்களில் ஒன்றாக இது அமைந்தது.

## கல்லுண்டாய் வெளியில் பெற்ற அனுபவம்

கல்லுண்டாய் வெட்டை வெளி, வயல்வெளிகளைக்கொண்டது. முதல் நாள் இந்தியத்துருப்புக்கள் தளம் அமைத்திருந்த இலக்கை நோக்கி முன்னேறத் தொடங்கினோம். விமானத்தாக்குதல்கள், எறிகணைத்தாக்குதல்களுக்கு மத்தியில் வயல்களில் சேற்றுக்குள்ளாலும் சகதி நீருக்குள்ளாலும் முன்னேறினோம் வெட்டை வெளி என்பதால் எம்மீதான இந்தியத் துருப்புக்களின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருந்தது. இரண்டாம் நாள் முன்னேறி எதிரியின் தளத்தில் இருந்து ஏறத்தாழ எழுபத்தைந்து யாரில் நிலை எடுத்தோம். இந்நேரம் பசி எம்மை வாட்டியது. ஒரு வயதான ஐயா வெட்டை வெளிக்குள் குனிந்து கொண்டே ஓடி வந்தார். அவரை நாம் வியப்போடு பார்த்தோம் அவரின் இரண்டு கைகளிலும் இரண்டு வாளிகள் இருந்தன. அவர் எங்களுக்குக் கிட்ட வந்தபோது ஒரு வாளியில் ஆறிய தேநீரும், ஒரு வாளியில் குழைத்த சோறும் அவர் கொண்டு வந்ததை அவதானித்தோம். அந்த

( 11 ஆம் பக்கம் பார்க்க )

# விடிவெள்ளி ★ ★ ★

## உழைக்கும் பெண்களின் நம்பிக்கை ஒளி

பெண்களின் முன்னேற்றத்துக்கும் அபிவிருத்திக்குமான வேலைத்திட்டங்கள் பலவற்றில் விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு ஈடுபட்டுள்ளது. அவற்றுள் ஒன்றுதான் கோப்பாயில் அமைந்துள்ள 'விடிவெள்ளி' நிறுவனம். இந்நிறுவனத்தின் சிறப்பம்சம் என்னவென்றால் இங்கு பெண்கள் மட்டுமே எல்லா வேலைகளிலும் ஈடுபடுகின்றார்கள். இந்நிறுவனத்தைப்பற்றி விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்களிடம் கேட்டபோது,

''ஆரம்பத்தில் நாம் இதை இலாப நோக்கம் கருதி ஆரம்பிக்கவில்லை. குற்றங்களில் ஈடுபட்ட தண்டனைக்குரிய பெண்கள் வேலைசெய்த பண்ணையாகத்தான் இருந்தது. நாளடைவில், இங்கு பல பெண்களை உற்பத்தியில் ஈடுபடுத்தி நிறுவனமாக்கினால் அதன் மூலம் பல பெண்களுக்குத் தொழில் வாய்ப்பை வழங்கலாமே என்று ஒரு எண்ணம் எங்களுக்குத் தோன்றியது. அந்த எண்ணத்தை உடனேயே செயல்வடிவமாக்கி விட்டோம். ஐந்து பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று முப்பத்தைந்து பெண்களுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மூலையில் முடங்கிக் கிடந்த பல பெண்கள் இங்கே வெளிச்சத்துக்கு வந்திருக்கின்றார்கள். ஆண்கள் மட்டுமே செய்துவந்த சிலவேலைகளை இன்று இவர்களும் செய்கின்றார்கள். சரக்கு உந்துருளியில் (லொறியில்) போய் உமிமூடைகளைத் தாமே ஏற்றி இறக்குகின்றார்கள்.

விடிவெள்ளி நிறுவனம் பெண்களுக்கான வேலை வாய்ப்பு நிறுவனம் என்ற தனித்துவத்துடன் தொடர்ந்து இயங்கவேண்டும்; குறைந்தது நூறு பெண்களுக்காவது வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம்''

என்றார் அவர்.

இந்நிறுவனத்தில் ஆரம்பத்தில் தோட்ட வேலைகள் மட்டும் செய்தார்கள். பின்னர் கோழி வளர்ப்பு, ஆடுவளர்ப்பு, பற்பொடி தயாரித்தல் என்று வேலைகள் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இவற்றைவிட கோப்பித்தூள், மஞ்சள்தூள், இறைச்சிக்கூட்டு, சாம்பிராணி, ஏலம், விபூதி, குரக்கன்மா, அரிசிமா, மிளகாய்த்தூள், பப்படம் போன்ற பொருட்களையும் தயாரிப்பதுடன் தேனைப் போத்தலில் அடைத்தல், வேப்பெண்ணெய்யைப்போத்தலில் அடைத்தல் போன்ற வேலைகளும் நடைபெறுகின்றன.

இந் நிறுவனத்தின் விற்பனை நிலையம் ஒன்று திருநெல்வேலியில் திறக்கப்பட்டிருக்கின்றது. அங்கிருந்துதான் வாடிக்கையாளர்களும், விற்பனையாளர்களும் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றார்கள்.

இந் நிறுவனத்தில் வேலை செய்யும் பெண்களின் செயற்பாட்டுத் திறன்பற்றி விடிவெள்ளி நிறுவன இயக்குனர் குயிலினி அவர்களுடன் கதைத்தபோது,

''இங்கு வேலை செய்யும் எல்லாப் பெண்களுக்கும் இங்கு நடக்கும் எல்லா வேலைகளையுமே பழக்கியிருக்கிறோம், ஏனென்றால் எல்லோருக்கும் எல்லாம் தெரிந்திருக்கவேண்டும் என்று நாம் நினைக்கின்றோம். அப்போதுதான் நாளைக்கு அவர்கள் தனியாகப் போனாலும் தமது சொந்தக் காலிலேயே நிற்பார்கள். ஆரம்பத்தில் அவர்கள் இருந்த நிலையோடு ஒப்பிடும்போது இப்போது மிகவும் முன்னேறியிருக்கின்றார்கள். நாளை இவர்களால் தனியாகவே ஒரு நிர்வாகத்தை நடத்த முடியும்" என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

என்றார்.

வேலைக்கு ஒவ்வொருநாளும் வந்து போக வசதி இல்லாதவர்களுக்கு நிறுவனத்திலேயே தங்கி நிற்கும் வசதி கொடுக்கப்பட்டுள்ளது. கல்வியறிவு குறைந்த பெண்களுக்கு இங்கே விடுமுறை நாட்களில் கல்வி அளிக்கப்படுகின்றது. ஒரு காலத்தில் எந்த உழைப்பிலுமே ஈடுபடும் எண்ணமின்றி இருந்தவர்கள், இன்று தம் பிரகாசமான எதிர்காலத்துக்காகக் கடுமையாக உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இங்கு வேலை செய்யும் பெண் ஒருவருடன் கதைத்தபோது ''இங்கே வேலை செய்வதால் வருமானமும் கிடைக்கின்றது. நல்ல பொழுதுபோக்காகவும் இருக்கிறது. வீட்டில் இருக்கும்போது பக்கத்தில் இருக்கும் கடைக்குக்கூட போகமுடியாது.

'தம்பி இருக்கின்றான்தானே. தம்பி போகட்டும்கடைக்கு. நீ போகவேண்டாம்.'

என்று சொல்வார்கள். எதற்கெடுத்தாலும் 'நீ பெண்பிள்ளை, பெண் பிள்ளை' என்று சொல்லித் தடுப்பார்கள்.

' ஏன் பெண்கள் கடைக்குப் போகக்கூடாது? ஏன் தம்பி வாங்கும் பொருட்களை என்னால் கடையில் வாங்கமுடியாது?' என்று நான் யோசிப்பதுண்டு.

ஆனால் நான் இங்கே வந்த புதிதில் இங்கிருந்த பெண்கள் செய்த வேலைகளைப் பார்க்க,

'ஆண்கள் செய்யும் வேலைகளையெல்லாம் எப்படி இவர்கள் செய்கின்றார்கள்?'

என்று யோசனையாக இருந்தது

ஆனால் நினைத்தால் பெண்களால் எதையுமே சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் நாம் எமக்குப் பொறுப்பாக இருந்த பெண்போராளியால் வளர்க்கப்பட்டோம். ஆரம்பத்தில் கடினம் போல் தோன்றிய வேலைகளெல்லாம் இப்போது துரும்பு போலாகிவிட்டது.

''இங்கே வேலை செய்வதால் எமக்குப் பல நன்மைகள் கிடைக்கின்றன. எமக்குத் தேவையான பொருட்களை நாமே வாங்குகின்றோம். வீட்டுச் செலவுக்குப் பணம் கொடுக்கின்றோம். இதனால் குடும்பத்தினரும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள். நாங்களும் மகிழ்ச்சியாக இருக்கின்றோம். எங்கும் போய்வரமுடிகிறது. எந்தப் பயமுமே இல்லாமல், என் காலில் நான் நிற்பேன் என்ற நம்பிக்கை எம்மிடம் இருக்கிறது.''

என்று அவர் எம்மிடம் சொன்னார்.

இன்னொருவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது.

''வீட்டில் இருக்கும்போது பப்படத்தைச் சாப்பிடமட்டுமே தெரியும். இங்கே வந்துதான் அதை எப்படிச் செய்வது என்று தெரிந்துகொண்டேன். முன்பு யாழ்ப்பாணம் என்றால், யாழ் நகர்ப் பகுதியைமட்டும்தான் தெரியும். இப்போது யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையும் தெரியும். வீட்டில் இருந்தபோது சிறைக்கைதி போலத்தான் வாழ்ந்தோம். இப்போது சுதந்திரமாக வாழுகின்றோம். எங்களின் இந்த முன்னேற்றத்துக்கு ''விடிவெள்ளி' நிறுவனம்தான் காரணம்''

என்று கூறினார்.

''நாங்கள் எல்லோரும் சரக்கு உந்துருளியில் போய் உமி எல்லாம் ஏற்றிவருகின்றோம். ஆண்களுக்குக் கொடுக்கப்படுவதுபோன்றே எமக்கும் சம்பளம் தருகின்றார்கள். சில நாட்களில் திடீர் என்று கூடுதலான கேள்வி வந்தால், இரவிரவாகக்கூட வேலை செய்வோம். எமக்குத் தெரியாத எவ்வளவோ விடயங்களை நாம் இங்கு வந்தபின் தெரிந்துகொண்டோம். எங்களெல்லோரினதும் கூட்டு முயற்சியால் இந் நிறுவனம் மேலும் மேலும் முன்னேறிவருகின்றது. ''விடிவெள்ளி'' என்றொரு நிறுவனம் இருக்கின்றது என்று எல்லோருக்கும் தெரியவேண்டும்; பல பெண்கள் இந்நிறுவனத்துடன் இணைந்துகொண்டு முன்னேறவேண்டும் என்பதே எமது நோக்கம்.''

என்று இன்னொரு பெண் கூறினார்.

இருள்தான் வாழ்வு என்று எண்ணி இருளிலேயே வாழ்ந்தவர்கள் வெளிச்சத்துக்கு வந்ததும் இருளிலிருக்கும் ஏனையவர்களையும் வெளிச்சத்துக்கு அழைத்து வரவே விரும்புவார்கள்.

**கீர்த்தா**

இந்தப் பெண்களும் அத்தகையவர்கள்தான். வீட்டுக்கு வெளியே வந்து, இந்த நிறுவனத்தில் இணைந்து உழைப்பதன்மூலம் இவர்கள் சமூகத்தின் சில தடைகளை உடைத்துவிட்டார்கள். நாமும் அதைத்தான் எதிர்பார்க்கின்றோம். வீட்டிலிருக்கும் பெண்கள் வெளியே வரவேண்டும் என்பதற்காகவே நாம் விடிவெள்ளி நிறுவனம் போன்று வேலைத்திட்டங்களை முன்வைத்திருக்கின்றோம். இவற்றில் தம்மை ஈடுபடுத்துவதன்மூலம் தமது வாழ்நிலையை உயர்த்துவதற்குப் பெண்கள் முன்வர வேண்டும்.





எமது சமூகத்தின் சனத் தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப்படுத்தியது. பெண்களை அரசியல்மயப்படுத்தி போராட்டத்துக்கு அவர்களை அணி திரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழப் பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியிருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது.

**தலைவர் திரு. வே. பிரபாகரன்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.




பயிற்சி... பயிற்சி

பூநகரி கூட்டுத்தளம் மீதான தாக்குதலுக்கான கடுமையான பயிற்சி அது.

பயிற்சி ஆரம்பிக்க முன்னும் பின்னும் இடையே எதையாவது பற்றி கதைப்பதாக இருந்தாலும் அந்த ஆலமரத்தின் கீழ் எல்லோரும் ஒன்று கூடுவது வழக்கம். அன்றும் அப்படித்தான் எதையோ பற்றிக் கதைப்பதற்காக ஒன்று கூடியிருந்தோம்.

திடீரென ஒருத்தி ''பழுதடைந்த புக்காரா விமானங்களை ஆர்ஜன்ரீனா நாட்டு நிபுணர்கள் திருத்துவதற்காகப் பலாலி வந்திறங்கினர். விரைவில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவடையும் என நம்பப்படுகிறது. ........... டட்ட டாய்ங் .... '' என பத்திரிகைச் செய்தியை வாசிக்கிறாள்.

உடனே எனக்கு அருகே இருந்த தயாளினி நாம் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த இடத்திலிருந்த கோவிலை நோக்கி கரம் கூப்பியபடி ''கட

---

**அடிக்கடி, தான் சண்டைக்குப் போகப் போகிறேன் என தனக்குப் பொறுப்பாக இருப்பவர்களை நச்சரிப்பாள். அதற்கு அவர்கள் ''உனக்கு கை ஏலாது நீ சண்டைக்கு துப்பாக்கி கொண்டு எப்படிப் போவது நீ இஞ்சையே நில்'' எனக் கூறியதற்காக சிரமப்பட்டு இயலாத கையினால் துப்பாக்கியைத் தாங்கிப்பிடிக்கப்பழகி, தினமும் குறிபார்த்துப் பழகி சிறிது காலத்தில் மீண்டும் அவர்கள் முன்சென்று ''இந்த ஏலாத கையால் ''புள்'' அடித்துக் காட்டினால் சண்டைக்கு எடுப்பியளோ ...?'' எனக் கேட்டு, அதேபோல் அடித்தும் காட்டி, சண்டைக்குச் செல்வதற்கு அனுமதி வாங்கிய இவளின் இந்தத் தந்திரமான வீரம், சண்டை செய்வதில் உள்ள அடங்காத ஆர்வமெல்லாம், சென்றுவிட்ட மாவீரர் சந்ததி விட்டுச் சென்ற கொடைதானோ, என்னவோ .......**

---

வுளே ....... எங்கடை சண்டைக்கு முதல் அவன் திருத்தி முடியக்கூடாது .... ...அப்பிடி முடியாவிட்டால் உனக்கு ஒன்பது தேங்காய் அடிக்கிறன் ..'' என உரத்த குரலில் வேண்டுகிறாள்.

''என்னப்பா இது ..... ..திருத்தி முடியாட்டா அவனிட்டை வேற பொம்பர் இல்லையே... இல்லாட்டாலும் ஏன் அவ்வளவு நாளும் திருத்தாமல் இருக்கப்போறான் .....?'' என்கிறாள் ஒருத்தி.

''வேற பொம்மர் இருந்தாலும், கொஞ்ச பொம்மர் எண்டால் போராளிகளின்ரை அநியாய இழப்புக் குறையும். திருத்திறத்துக்குத் தேவையான பாகங்கள் ஏதும் கிடைக்காமல் அல்லது கொண்டுவரப்பிந்தினால் திருத்திறத்துக்கு நாள் செல்லும் தானே .. .. ?'' என மற்றொரு போராளி கூறுகிறாள்.

''ஏன் ஆர்ஜன்ரீனாக்காரங்களுக்கும் என்ன பொருளாதாரத் தடையே .. ......?'' என்ற மற்றொரு போராளியின் கேலிப் பேச்சுக்கு எல்லோரும் சிரித்துக்கொண்டிருக்கையில் கூட்டம் ஆரம்பிக்கவே சிரிப்பு ஓய்கிறது.

★★ ........ ★

ஒருநாள்—

தயாளினியைப்பார்த்து ஒரு சகதோழி கேட்கிறாள் "தயாளினி நீ பேயாய் வந்தால் ஆரையடி வெருட்டுவாய் .......?"

''நான் பேயாகினால் அடுத்த கணமே மூதூருக்குப் பறந்திடுவன். இஞ்சை நிண்டு ஒருத்தரையும் வெருட்ட மாட்டன் .... '' என கண்கள் மின்னக்கூறுகிறாள்.

''ஏன் மூதூரிலை ஆரைப் பார்க்க ......?'' என மற்றொரு போராளி கேலியாகக் கேட்க,

''எங்கடை மக்களைப் பார்க்க ஆக்கிரமிப்புப் படையைக்கொல்ல... பேயாய் போயெண்டாலும் ஆக்கிரமிப்புப்படையைக் கலைச்சுப்போட்டு எங்கடை நிலத்திலை தமிழரைத்தான் இருக்க விடுவன் . ...!'' பகிடியான கேள்விக்கு தீவிரமான போக்கில் பதில் சொல்கிறாள்.

**மேஜர் தயாளினி**



சுபா பாலசுந்தரம்
மூதூர்
பிறப்பு: 1972 - 08 - 29
வீரச்சாவு: 1993 - 11 - 11

இவள்தான் எங்கள் தயாளினி.

1989 ம் ஆண்டு ஆனி மாதம் தென்தமிழீழப் பெண்கள் சிலர் இந்திய அரக்கர் படையை அழிக்க ஆயுதம் ஏந்தத் துணிந்தனர். எத்தனையோ இராணுவக் கண்காணிப்புகளுக்கு மத்தியில் விடுதலைப் புலிப் போராளிகளுடன் தொடர்பு கொண்டு இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொண்டனர். மகளிர் படைப்பிரிவு அப்போது சிறிய அணியாக இருந்ததால் வடதமிழீழத்தில் மட்டுமே இயங்கிவந்த காலம் அது. காடுகளையும், கடல்களையும் ஆறுகளையும் கடந்து மிக இன்னல்களுக்கு மத்தியில்

**( சித்ரா )**

அவர்கள் வடதமிழீழம் வரவேண்டியிருந்தது.

இப்படி பயிற்சிக்கு முன்னரே பல இன்னல்களை அனுபவித்து இயக்கத்தில் தம்மை இணைத்துக்கொள்ள வடதமிழீழம் வந்து சேர்ந்த அந்தப்பெண் உறுப்பினர்களில் திருகோணமலை மூதூரில் சேனையூர் எனும் இடத்தைச் சேர்ந்த தயாளினியும் ஒருத்தி. இவளின் இயற்பெயர் சுபா. ஆனால் குடும்பத்தில் எல்லோரும் இவளை சின்னத்தங்கச்சி எனச் செல்லமாக அழைப்பார்கள். இவள் தனது ஆரம்பப்படிப்பை கட்டைபறிச்சானிலுள்ள விபுலானந்த வித்தியாலயத்தில் படித்தாள். தனது மேல் வகுப்புப்படிப்பை சேனையூர் மகாவித்தியாலயத்தில் கற்றாள்.

இயல்பாகவே இவளுக்கு இருந்த திறமையாலும் கல்வியில் இவளும் இவளது பெற்றோர்களும் காட்டிய ஊக்கத்தாலும் தயாளினி சேனையூரிலே திறமையாக மாணவிகளில் ஒருத்தியாக விளங்கினாள். அது மட்டுமல்லாது விளையாட்டுத் துறையிலும் இவள் சிறந்து விளங்கினாள். ஆனால் இவளின் குடும்ப வசதியின்மை காரணமாக இவளது திறமைகள் பாடசாலை மட்டத்திலேயே முடக்கப்பட்டு விட்டன.

இயல்பாகவே திறமையும், துடிப்பும் சிந்திக்கும் ஆற்றலும் படைத்த இவள் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டது வியக்கத்தக்கதல்ல.

பல இன்னல்கள் மத்தியில் அளம்பில் காட்டுக்கு வந்துசேர்ந்த இவள் அங்கு வந்து சேர்ந்த பின்னர் கூட உடனடியாகப் பயிற்சி ஆரம்பிக்காத நிலையில் எமக்குத் தேவையான உணவை நாமே சுமந்துவரும் கடமையில் அந்தக் காட்டுப்பாதையால் கூட களைப்பின்றிச் சலிப்பின்றி ஈடுபடுவாள்.

போராட்டத்தில் இவளுக்கிருந்த ஆர்வம் காரணமாக பயிற்சிக்கு முன்னரே பெண் போராளிகள் ஆயுதங்களைத் துப்பரவு செய்யும்போது அருகில் சென்று அவதானிப்பாள், கேள்விகள் கேட்பாள், தூக்கிப்பார்ப்பாள்.

---

**துப்பாக்கி வேட்டுக்களுக்கும், குண்டுச் சத்தங்களுக்கும் நடுவே வோக்கியில் கதம்பமாய் பல குரல்கள் ஒலித்தன. சிறிது நேரம் கழிந்திருக்கும். மகளிர் படையின் பகுதிக்குரிய தாக்குதலைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருந்த சிறப்புத் தளபதி ஜனாவை வோக்கியில் அழைத்த தயாளினி,**

**"நாங்கள் ''பவள்'' கவச வாகனத்தின் மேல் நிற்கின்றோம் ... '' எனக் கூச்சலிட்டாள்.**

---

பயிற்சியின்போது மிகவும் உற்சாகமாகப் பயிற்சி எடுத்தாள். பாடசாலையில் விளையாட்டுத்துறையில் ஈடுபடுபவள் என்பதால்பயிற்சி இவளுக்குச் சிரமமாக இருக்கவில்லை. காடுகளிலும் பற்றைகளிலுமாகக் கடுமையாகப் பயிற்சி எடுத்தாள். ஆயுதங்களை இலகுவில் இயக்கப் பழகிக் கொண்டாள். பயிற்சியின் முடிவில் இலகு இயந்திரத்துப்பாக்கிக்குரியவருக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டாள். இதனால் கனரக ஆயுதப்பயிற்சியும் எடுத்தாள். அதிலும் திறமையாகவே செயற்பட்டாள்.

1990 இல் இந்திய அமைதிகாக்கும் படை விரட்டியடிக்கப்பட்டபின் நாடுவந்த இவள் பலாலி இராணுவ முகாமைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்த காவல் நிலையில் காவலில் ஈடுபட்டாள்.

சிறிது காலத்தில் இவளின் ஆர்வமான செயற்பாடுகள் காரணமாகவும், திறமை துணிவுகாரணமாகவும் ஒரு குழுவுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டாள். பூவரசங்குளம், கிளிநொச்சி, தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளுக்கு குழுத்தலைவியாகவே சண்டைக்குச்சென்று வந்தாள்.

பின்னர் 1990ம் ஆண்டு 03 மாதம் சிலாவத்துறைச் சண்டையிலும் பங்கு கொண்டாள். இச் சண்டையின் பின்னர் ஆனையிறவுப் பெருஞ்சமருக்கான பயிற்சி ஆரம்பமாகியது.

தயாளினி குழுவிலுள்ள அனைவரிடமும் அன்புடனும் பாசத்துடனும் பழகுவாள். உணவருந்தினார்களா, குளித்தார்களா, தலைக்கு எண்ணெய் வைத்தார்களா என்பதிலிருந்து துப்பாக்கி துப்பரவு செய்தார்களா, காவல் கடமையில் சரியாக ஈடுபடுகிறார்களா என்பது வரை பார்ப்பாள். செய்யாவிடில் தானே நின்று அதனைச் செய்விப்பாள். தான் தண்டனை வாங்கினாலும் குழுவிலுள்ள பிள்ளைகளுக்கு தண்டனைகள் வழங்கமாட்டாள். அறிவுரைகள், புத்திமதிகள் கூறியே திருத்துவாள்.

இவளின் இவ்வாறான இயல்புகளையும் இவளுக்கிருந்த திறமைகளையும் கண்டு ஒரு குழுவின் பொறுப்பாளராக இருந்த இவளை நான்கைந்து குழுக்களின் பொறுப்பாளராக நியமித்தனர்.

தயாளினி இயல்பாகவே அமைதியான குணம் உடையவள். ஆனால் கதைக்காமல் திரிபவளல்ல. அளவாகக் கதைப்பாள். மென்மையாகச் சிரிப்பாள். சக தோழிகள் இவள் கீச்சுக்குரலில் கதைப்பது போல் செய்து இவளைப் பகிடிபண்ணினால் வெட்கம் கலந்து சிரிப்பாள். தனக்கு மூத்த போராளிகளுடன் பழகும்போது மிகவும் பண்புடனும் மரியாதையுடனும் பழகுவாள். அவர்கள் ஏதாவது வேலைகள் கொடுத்துவிட்டால் தனது கடமைகளுக்கு நடுவிலும் குடுகுடுவெனச் செய்து முடித்துக் கொடுப்பாள்.

(7 ம் பக்கம் பார்க்க)

# பெண்கள் சிறந்த ஒற்றர்களாக விளங்குகிறார்கள் அவர்கள் ஆண்களிடமிருந்து வேலையைப் பொறுப்பெடுக்கின்றார்கள்

(ஜேம்ஸ் அடம்ஸ், லியம் கிளாக் – ஐலண்ட் 07-01-1992)

அவளுடைய பெயர் ஜேன்பொன்ட் (Jane Bond). எம் 15 (M 15) என்றழைக்கப்படும் பிரித்தானிய பாதுகாப்புச் சேவையின் தலைமைப் பதவிக்கு ஸ்ரெல்லா ரெமிங்ரன் (Stella Remington) நியமிக்கப்பட்டது அண்மைக் காலம் வரை பிரித்தானிய புலனாய்வுத்துறையினர் பாதுகாத்து வந்த இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டது. சிறந்த ஒற்றர்களாக விளங்கும் பெண்கள் முன்னர் ஆண்கள் ஆற்றி வந்த இந்தப்பணியைத் தற்போது திறம்பட செய்து வருகின்றார்கள். ஆண்களை விடப் பெண்களே இரகசிய சேவையில் இப்போது கூடுதலாக நியமிக்கப்படுகின்றார்கள். சென்ற பத்தாண்டுகளில் இச்சேவையிலுள்ள ஆண்களின் நிலையில் மாற்றமேற்பட்டுள்ளது. இதில் (M 15) 40 வீதம் விகிதம் பெண்களாக இருப்பதுடன் இத்தொகை மேலும் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகெங்கும் சில வருடங்களாக இரகசிய சேவையில் பெண்களின் பங்கு கூடி வந்த போதிலும் இவர்களுடைய பங்குகள் பெருமளவில் மறைக்கப்பட்டே வந்தது. அதன் மூலம் அவர்கள் இலகுவாக வேலை செய்யக்கூடியதாக இருந்தது. மேற்குலகிலுள்ள எந்தவொரு இரகசிய சேவையிலும் பார்க்க எம் 15 இரகசிய சேவையில் பணியாற்றும் 2000 பேரில் 50 வீதம் விகிதத்திற்கு மேலானோர் முப்பது வயதுக்கு குறைந்தவர்களாகவும், இவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண்களாகவும் இருக்கின்றார்கள். வெளிநாட்டு உளவு வேலைகளுக்குப் பொறுப்பாக இருக்கின்ற எம் 16 (M 16) என்றழைக்கப்படும் இரகசிய சேவை அதிகாரபூர்வமாக இயங்காமையால் அதில் கடமையாற்றும் ஆண்களின் எண்ணிக்கை யாருக்கும் தெரியாது. இருப்பினும் இச்சேவையில் பல பெண்கள் நிலைய அதிகாரிகளாகவும், உயர்பதவி வகிப்பவர்களாகவும் இருப்பதைக் காண முடிகிறது.

உளவு பார்க்கும் தொழிலில் பெண்கள் மிகவும் திறமையாகப் பணியாற்றுகிறார்கள் எனப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். ஆராய்ந்தறிகின்ற திறனும், கூரிய நோக்கும் தாங்கள் எடுத்த காரியத்தில் கண்ணாயிருக்கின்ற போக்கும் உள்ளவர்கள் எனவும், பத்தொன்பது வேறு வேறு விதமான விடயங்களை ஆண்களை விட ஒரே நேரத்தில் சிந்திக்கும் ஆற்றல் உள்ளவர்கள் எனவும் அவர்கள் கருதப்படுகிறார்கள்.

ஆண்களை விட பெண்கள் செயலாற்றல் மிக்கவர்கள் எனக் கணிக்கப்பட்டுள்ளனர். இரகசிய சேவையில் ஆண்களைவிட பெண்கள் திறமையாக செயலாற்றக் கூடியதாக இருப்பதுடன், எந்த நெருக்குதலுக்கு மத்தியிலும் ஆண்களை விட அவர்கள் நம்பத்தகுந்தவர்களாக இருப்பதையும் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த கணனி காலத்தில் தகவல்களைத் திரட்டுதல், குறுக்குக் குறிப்பு எடுத்தல் ஆகிய புலனாய்வுத்துறைப் பணிகளைப் பெண்கள் ஆண்களைவிடத் திறம்படச் செய்து வருவதாக அறியமுடிகிறது.

1975-ம் ஆண்டுக்கு முன் பிரித்தானிய இராணுவத்தில் உளவுப்பிரிவிலுள்ள பெண்கள் செயலாளர்களாகவும், சிலர் உதவியாளர்களாகவுமே பயன்படுத்தப்பட்டனர். தற்போது இவர்கள் இத்துறையில் முழுமையாக இணைக்கப்பட்டுள்ளனர்.

முக்கியதுறைகளில் ஒன்றான பயங்கரவாத எதிர்ப்புத்துறையில் தற்போது பணியாற்றிவரும் பெண் உளவாளிகள் காட்டிவரும் அறிவுத்திறன் பெறுமதி வாய்ந்ததொன்றாகவிருக்கின்றது. 1970 களில் வட அயர்லாந்திலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதிலும், பகுத்தாராய்வதிலும் உளவுபார்க்கும் படைத்துறையினருடன் இணைந்து செல்வி ஸ்ரெல்லா பணியாற்றியுள்ளார்.

இதன் பின்னரும் அவர் வட அயர்லாந்துக்குச் சென்றிருக்கின்றார். அமைதியான அணுகுமுறையைக் கடைப்பிடிப்பவர் எனவும் ஒரு சிறந்த நிருவாகியும், அமைப்பாளரும் எனவும், இத்துறையில் மேல்மட்டத்திலுள்ள பலரைப்போல் அவரும் தகவல்களை விரைவில் கிரகிக்கக்கூடியவர் எனவும், அதற்கு முழுவடிவம் கொடுக்கக்கூடிய ஆற்றலுடையவர் எனவும் இரகசிய சேவையைச் சேர்ந்த அதிகாரிகள் அவரைப் பற்றிக் கூறியுள்ளார்கள்.

பயங்கரவாத எதிர்ப்புப் பணிகளில் அதிகமாக நேரத்தைச் செலவிடவேண்டியிருந்தமையே பெண் உளவாளிகள் ஆரம்பத்தில் இத்துறையில் திறம்பட செயலாற்ற முடியாமைக்கான காரணமாகும். சில வேளைகளில் இருபத்திநான்கு மணித்தியாலங்களும் இப்பணியில் ஈடுபடவேண்டியதாயிருக்கும். வீட்டுப் பிரச்சனைகள் இருந்த போதிலும் எந்த நேரத்திலும் எப்பொழுதும் கடமையாற்ற செல்வி ஸ்ரெல்லா ஆயத்தமாக இருந்தார்.

விசேட பிரிவின் அங்கத்தவர்களாக இருக்கக் கூடிய பெரும் எண்ணிக்கையான பெண்கள் கண்காணிப்புப் பணியிலே ஈடுபடுத்தப்படுகின்றார்கள். பிறைற்றன் (Brihton) என்ற இடத்தில் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் சம்பந்தமாக புலனாய்வு மேற் கொண்டிருந்த வேளையில் மறைமுகக் கண்காணிப்புக்குப் பொறுப்பானது ஈ. 4 ஏ (E 4A) என அழைக்கப்படுவதுமான றோயல் அல்ஸ்ரர் படைப்பிரிவின் ( Royal ulster) இரகசிய அமைப்பைச் சேர்ந்த இருவர் காதலர்களாக நடித்துக் கொண்டு அக்குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட பீற்றர் செறி (Peter Sherry) என்பவரைக் கண்காணிப்பதற்காக வட அயர்லாந்து ( Northern Ireland) ஸ்கொட்லாந்து ( Scotland) கிளாஸ்கோ ( Glascow) ஆகிய இடங்கள் வரை பின்தொடர்ந்தனர்.

ஆணும் பெண்ணும் சேர்ந்த வாகனரோந்துகளை இராணுவப் புலனாய்ப்வுபிரிவு மேற்கு பெல்பாஸ்ட் (West Belf st டிலும் மற்றும் குழப்பங்கள் நிறைந்த இடங்களிலும் நடாத்திவந்தது. ஒரு காரில் செல்லும் இரண்டு ஆண்கள் மற்றவர்களின் கவனத்தை ஈர்ப்பதுபோல ஒரு ஆணும், ஒரு பெண்ணும் ஈர்ப்பதில்லை என நம்பப்படுவதிலேயே ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுகின்றார்கள்.

ஒரு காரில் செல்லும் ரோந்து குழுவினர்தாக்கப்பட்டால் அவர்களுக்குதவி வழங்குவதற்காக ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் இரண்டு குழுக்களாக இரு வெவ்வேறு கார்களில் ஆயுதமேந்திச் செல்கிறார்கள்.

அடுத்த பத்தாண்டுகளில் உளவு பார்க்கும் துறையில் எல்லாத்தரத்திலும் பெண்களின் தொகை அதிகரிக்கும். எம் 15 உளவு அமைப்பின் தலைமைப் பதவியை வகித்து அதிலிருந்து ஓய்வுபெறப் போகின்ற அதிகாரி பெண்களை நியமிப்பதை தனது கொள்கையாகக் கொண்டிருந்தார். இந்தக் கொள்கை மேலும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய உலக ஒழுங்கில் நாம் எதை எதிர் பார்த்தோமோ அதற்கு எதிர்மாறாக எம் 15 தன்னை வளர்த்துக்கொள்ளவே விரும்புகின்றது. அது தனது செலவினங்களை அதிகரித்துள்ளதுடன் தன்னுடைய எண்ணிக்கையையும் அதிகரித்துள்ளது. சென்ற மூன்றாண்டுகளில் முந்நூறு பேர் மேலதிகமாக இந்த அமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

எம் 15 உடைய எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வுகள் முடியும் தறுவாயில் இருக்கின்றன. ஐரிஸ் புரட்சிப் படையின் (IRA) பயங்கரவாத நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பெரும் அச்சுறுத்தலாக இருக்குமென இந்த ஆய்வின் ஆரம்ப பெறுபேறுகள் தெரிவிக்கின்றன. இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் பணியில் பெண்களுக்கு முக்கிய பங்கு உண்டு என நம்பலாம்.

நன்றி:
தேர்ந்த கட்டுரைகள்-6

## என் கண்கள் விழித்திருக்கும்

கிழக்கு வெளுத்து இருள் கலைத்து,
ஊமையாய்க் காற்று அழுதது.
எனது சிவந்த விழிகளில்
இரத்தப் பசையில்லை.
அப்படியாயின் அது!
கனலின் தெறிப்பு
நீண்ட இரவுகளில்,
புழுதி படிந்த நிலத்தோடு
எனது பரிச்சயம்.
அதற்கும் எனக்குமான உறவு,
தாயின் மடிதேடும்
இமைகள் பிரியாத
குழந்தை யொன்றின்
பிணைப்பாக,
இதில் நான் ஊர்ந்தபடி......

இந்த மண்ணின் மணத்தில்,
என் முன்வாழ்ந்த உறவுகளின்
மூச்சுக்கள் கலந்திருப்பதாய்
அமைதி தேடுகிறேன்.

இந்தப் புற்கள் என் நண்பர்கள்
அந்தரித்துத்திரியும் மின்மினிப் பூச்சி
என் விளக்கொளி.
பாளமாய் வெடித்த
மண்ணின் வாய்களில்
நெருஞ்சியின் நெருடல்கள்.
என் உடலின் இரத்தக் கசிவுகளிலும்,
இந்த மண்ணின் வாசனை
எனக்குப் பிடித்தமானது.

ஒரு வரலாற்றின் முன்பாக
என் சுட்டுவிரல் பதித்து
எழுதி அழித்த 'அ' வும்
கிறுக்கல்களாய் என்
இளமைக்காலச் சித்திரங்களும்
இங்கு,
உரு அழிந்து உறைந்திருப்பதாய்
அமைதி கொள்கிறேன்.

ஒரு நிறைநிலா நாளில்
வெள்ளை மணல் பூத்த
கரையின் ஓரத்தில்
கால்கள் புதையத் திரிந்த
பொழுதுகளில் மனம் பசுமை தேடும்
அந்தக் களவாடப்பட்ட
கடல்கள் ஓரம்
அலைகள் அழுவதாய் உணர்கிறேன்.
முண்டியடித்து ஓடும்
கறுப்பு முகில்கள்
குண்டுப்புகைக் கனத்தோடு அசைகின்றன.

வேளை வரும்
நாளை,
மழைத்தடை ஒன்றிலே
அவை மோதலாம்
அப்போது பூக்கும்,
நீர்த்தாரைகள் போல
என்துப்பாக்கியிலிருந்து
ரவைகள் கனன்றெழும்.
அதுவரை கனத்தமௌனத்தோடு
என் கண்கள் விழித்திருக்கும்.

கொற்றவை.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சீதனமும் தேசவழமைச் சட்டமும்

சுதாமதி

யாழ்ப்பாணச் சமுதாய அமைப்பினுள்ளே ஆழமாக வேரோடியுள்ள சீதனப்பிரச்சினையானது அதன் சமூக வளர்ச்சியில் அதன் தனித்துவத்தில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது. சீதனமும் சொத்துமே சாதாரண மக்களின் திருமண வாழ்வை, தாம்பத்திய உறவை நிர்ணயிக்கும் சக்தியாக வளர்ந்துள்ளது. இங்கு நடைபெறும் திருமணப் பேச்சுக்களும் பொருத்தத்தேடல்களும் குடும்பம் ஒன்றை அமைப்பதற்கு அவசியமான ஒருபகுதியான உடமைகளையும் பணத்தையும் மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவை.

காலங்களின் முதிர்ச்சியும் சமூகமாற்றங்களும் ஏற்பட்டு எத்தனையோ பழமையான மரபுகள் வழக்கொழிந்து போனபின்னருங்கூட சீதனவழக்கமானது காலநகர்வுகளிலே போகப்போக இன்னும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்ததே தவிர தளர்ந்தபாடில்லை. இத்தகைய பிற்போக்குத்தனமான, ஒரு பெண்ணின் கௌரவத்தை தனித்துவத்தைப் பாதிக்கின்ற சீதனவழக்கானது ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியையும் பெண்ணின் விடுதலையை நோக்கிய பாதையையும் குறுக்கிடும் செயற்பாடாக அமைந்துள்ளது. எனவே சீதனம் பற்றியும் அதன் சமுதாயத்தாக்கம் பற்றியும் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமன்று. சீதனவழக்கத்திற் செல்வாக்குச் செலுத்தியதில் மிக முக்கிய காரணியாக விளங்கிய, அதனைப் பேணியதில் முக்கிய பங்காளியாகச் செயற்பட்ட தேசவழமைச்சட்ட நடைமுறையில் சீதனத்தின் பங்கு எத்தகையது என்பதை இக்கட்டுரை விளக்க முனைகிறது.

இந்த வகையில் அமைந்ததுதான் தேசவழமைச்சட்டம். வடதமிழீழத்தில் வாழும் தமிழர்களைக் கட்டுப்படுத்துவதான இச்சட்டம், தனியார் சொத்துடைமையை வலியுறுத்துவதாக அமைந்தது. இலங்கைக் கரையோரப் பகுதிகளை ஆக்கிரமித்த ஒல்லாந்து தேசாதிபதியால் தொகுக்கப்பட்ட இச்சட்டமானது இற்றைவரை வழக்கிலிருந்தது.

தற்கால சூழ்நிலையில் யாழ்ப்பாண சமூக அமைப்பில் பாரியளவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. முன்னர் நடைமுறையில் இருந்த வழக்கங்கள் தற்போதில்லை. தத்தெடுப்பது, சிறைக்குடிகளை ஈடு வைப்பது போன்ற பழைய பழக்கவழக்கங்கள் மறைந்து விட்டன. தேசவழமையின் ஒரு அங்கமான அடிமை குடிமைமுறையும் படிப்படியாக ஒழிந்துவருகிறது. தேசவழமையிற் கட்டிக்காக்கப்பட்டு வந்த சாதியமுறைமையும் கூட படிப்படியாக வலுவிழந்து போய்க் கொண்டிருக்கிறது. திருமணப்பேச்சுக்கள் என்ற நிலையில் மட்டும் இன்னும் சாதியம் கட்டிக்காக்கப்படுவது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. எனினும் காலமாற்றமும் சமுதாயப்புரட்சியும் இவற்றில் முற்றாக மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

ஆனால் இக்கால நீட்சியிலும் மாறாத அதே வேளை இன்னும் இறுக்கமடைந்து செல்கின்ற ஒன்றாக இச்சீதனமுறைமை கடைப்பிடிக்கப்படுகிறது. யாழ்ப்பாணத்தின் சமூக பொருளாதார உறவுகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இது வலுவடைந்து போய்க்கொண்டிருக்கிறது.

இச்சீதனமுறையை உயர் குழாத்தினர் தங்களது சொத்துக்களை தங்களிடமேவைத்திருக்கவேண்றது. ஆணுக்கே முன்னுரிமை அளிக்கும் விதமாக மாறி, பெண் ஆனவள் தனது சீதனச் சொத்துக்களைக் கையாளுவதற்கான அவளது சுயமான உரிமைகளுக்கு முட்டுக்கட்டை போடும் நிலைக்குத் தள்ளப்பட்டாள்.

பெண்வழிச் சொத்துரிமை குடும்பத்தின் பெண் வழியினருக்கே உரித்தாகும் வகையிற்தான் அன்றைய சமூக அமைப்பு இருந்தது. சீதனம் என்ற வழக்கமும் அதற்காகவே ஏற்படுத்தப்பட்டது. இந்த முறைமையானது அன்றைய காலத்தில், தமிழர்களின் வாழ்வியக்கப் படிநிலையின் வளர்ச்சிக் காலத்தில் தாய்வழிச் சொத்துரிமையே இருந்ததென்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இருந்திருக்கிறது.

இப்படி முன்னோர் காலத்தில் பெண்ணின் சொத்துக்களைப்பேணும் வகையில் இருந்த சீதன வழக்கில் ஆணாதிக்கத்தின் செல்வாக்கு ஓங்கி, இந்த தேசவழமையின் சீதன முறைமையினை தங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொண்டனர்.

பெண் தனது சீதனச்சொத்துக்களை தன்னிச்சையாகப் பயன்படுத்தமுடியாதவளாக, ஆணின் சம்மதத்தின்பேரிலேயே தனது சொத்துக்களை பயன்படுத்தும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டாள். இச்சீதனவழக்கால் அவள் பயனடையவில்லை. மாறாக தனது சொத்துக்களுக்கே இன்னொருவரின் அனுமதிகோரி நிற்கவேண்டியநிலைக்கு ஆளாகினாள்.

இத்தகைய நடைமுறையை மாற்றி பெண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் 'தமிழீழத் தேச வழமைச்சட்டம்' அமுலாக்கப்பட்டது. தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரனின் ஒப்புதலின் பேரில் 1993 ஆம் ஆண்டு டிசம்பர் 1ம் திகதி நடைமுறையிற் கொண்டுவரப்பட்ட இச்சட்டம் முக்கிய சீர்திருத்தங்களைக் கொண்டு நிற்கின்றது.

1993 ஆம் ஆண்டின் 03 ம் இலக்கச்சட்டப்படி பெண்ணுக்கான சொத்தை அவள் அனுபவிக்கும் நியாயமான உரிமையை இச்சட்டம் வழங்குகிறது.

''திருமணமான பெண்கள் சகல விதத்திலும் சுதந்திரமாக விளங்குவார்கள். மனைவி தனது பிரத்தியேக தனிச் சொத்தையும் தேடிய தேட்டதின் அரைப்பங்கையும் தன் விருப்பப்படி கணவன் சம்மதம் இன்றி கையாள்வதற்கு உரித்துடையவர்'

காலனியாதிக்க நாடுகள் தனது ஆக்கிரமிப்பின் கீழ் கட்டுண்ட நாடுகளிடையே தனது ஆட்சியதிகாரத்தைப் பிரயோகிப்பதற்கு அந் நாடுகளிலுள்ள மேல்மட்ட மக்களைப் பயன்படுத்தும் முறை வழக்கிலிருந்தது. அந்த நாட்டில் நடைமுறையிலுள்ள பழக்கவழக்கங்கள் பண்பாடுகளை அடிப்படையாக வைத்து, சட்டங்களை இயற்றி அதனை மக்கள்மீது இவ் உயர் குழாத்தினரைக் கொண்டு காலங்காலமாக செயற்படுத்தி வந்தனர். இத்தகைய சட்டங்கள் பெரும்பாலும் உயர் குழாத்தினர் நடைமுறைப்படுத்திய பழக்கவழக்கங்களாக இருந்தன. எனவே அவர்கள் சார்ந்ததாக சட்டங்களும் இயற்றப்பட்டன.

டும் என்பதற்காகவும், பெண்களுக்கு ஏதோ சொத்து இருக்கிறது என்ற பொய்யான மாயையை உருவாக்குவதற்காகவும் கட்டிக்காத்துக்கொண்டிருக்கின்றனர்.

''உலகமே மாறுகிறது. எல்லாம் மாறுகிறது. யாழ்ப்பாணத்தில் சீதனமுறை மாறவில்லை'' என்று தேசவழமை தொடர்பாக எழுதிய கு. சிறீராமநாதன் குறிப்பிட்டது இங்கு நோக்குதற்குரியது.

எனினும் தேசவழமையிற் கூறப்பட்டிருந்த சீதனம்பற்றிய விடயங்கள் பெண்ணுக்குப் பாதுகாப்பு அளிக்கும் முகமாக கூறப்பட்டிருந்தபோதிலும் அது நடைமுறையிற் பின் வந்த காலங்களில் மாற்றமுற்

தற்போது நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட இப்புதிய சட்டத்தின்மூலம் பெண்களுக்கு சொத்துக்களை விற்கவோ வாங்கவோ சகல சுதந்திரங்களும் அளிக்கப்பட்டுள்ளன.

எனவே தமிழீழத் தேசவழமைச்சட்டமானது பழைய ஒல்லாந்த தேசவழமைச்சட்டத்திலிருந்து மாறுபட்டு பெண்ணின் தனித்துவமான சொத்துரிமைக்கு மதிப்பு அளிக்கும் வகையில் மாற்றப்பட்டிருப்பது வரவேற்புக்குரியதாகும்.

# சுதந்திரத்தைத்தேடி

ஆனையிறவுப் பெருஞ்சமருக்கு குழுக்களின் தலைவியாகவே சென்று போர் புரிந்தாள். பின்னர் மணலாற்றில் இடம்பெற்ற மின்னல் சண்டையில் ஈடுபட்டாள். காடு இவளை வளர்த்த இடம் என்பதால் தங்குதடையின்றி உற்சாகமாகப் போரிட்டாள். கடைசிநாளன்று இடது உள்ளங்கையில் துப்பாக்கி ரவையினால் காயமடைந்தாள்.

சிகிச்சையின் பின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் கல்வி கற்பதற்காகத் தெரிவுசெய்யப்பட்டாள். லெப். கேணல். ராஜன் அண்ணாவின் பொறுப்பில் நடைபெற்ற இக்கல்லூரியில் படிப்பிலும் சரி, பயிற்சியிலும்சரி விளையாட்டிலும்சரி தயாளினி திறமையாகவே செயற்பட்டாள். பரீட்சைகளில் எல்லாம் நல்ல புள்ளிகளே எடுத்தாள்.

இக்கல்லூரிப் படிப்பின் பின்னர் நிர்வாக சேவைகளில் சிறிது காலம் ஈடுபட்டபின்னர் வடமராட்சியிலுள்ள ஒரு தளத்துக்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டாள். காடும், பற்றையுமாக இருந்த அந்த முகாமை திருத்திச் சீரமைத்து கண்ணுக்குக் குளிர்மையான ஒரு தளமாக மாற்றிய பெருமை தயாளினியையே சாரும்.

அருகே பொறுப்பாக நிற்கும்போது அடிக்கடி தான் சண்டைக்குப் போகப்போகிறேன் என இவளுக்குப் பொறுப்பாக இருப்பவர்களை நச்சரிப்பாள். அதற்கு அவர்கள் ''உனக்குக் கை ஏலாது. நீ சண்டைக்குத் துப்பாக்கி கொண்டு எப்படிப் போவது நீ இஞ்சையே நில்'' எனக் கூறியதற்காக, சிரமப்பட்டு இயலாத கையினால் துப்பாக்கியைத் தாங்கிப்பிடிக்கப் பழகி, தினமும் குறிபார்த்துப் பழகி சிறிது காலத்தில் மீண்டும் அவர்கள் முன் சென்று ''இந்த ஏலாத கையால் புள் அடித்துக் காட்டினால் சண்டைக்கு எடுப்பியளோ ...?'' எனக்கேட்டு, அதேபோல் அடித்தும் காட்டி சண்டைக்குச்செல்வதற்கு அனுமதி வாங்கிய இவளின் இந்தத் தந்திரமான வீரம், சண்டை செல்ல உள்ள அடங்காத ஆர்வமெல்லாம், சென்றுவிட்ட மாவீரர் சந்ததி விட்டுச்சென்ற கொடைதானோ, என்னவோ... ...

சண்டை செல்ல அனுமதி பெற்ற பின்னர்கூட அந்த தளத்தில் அமைந்துள்ள நூலகம் இவளது கைவண்ணத்தால் மேலும் மெருகேறியது. அதன் அமைப்பும், அமைதியும் எனக்கு மிகவும் பிடித்துவிட்டது என நான் ஒருமுறை கூறியபோது.

''நான் எதையாவது ஒன்றைச் சாதிக்காமல் சாகமாட்டேன், அப்படிச் சாதிச்சிட்டு நான் செத்தாப்பிறகு என்ரை படம் ஒன்றை இதிலை கொழுவுங்கோ'' எனச்சிரித்தபடி கூறினாள். இன்று அந்த நூலகத்தையும் அதிலுள்ள அவளின் படத்தையும் பார்க்கும் எவருக்கும் அவளின் ஞாபகங்கள் நிச்சயம் வரும்.

போராளிகளுடன் மட்டுமல்ல மக்களுடனும் தயாளினி மிகவும் அன்பாகப் பழகுவாள். அவள் அந்த தளத்தை விட்டுப் போனதன் பின்னர் கூட அடிக்கடி அவளை யாரிடமாவது விசாரித்துவிடும் அளவுக்கு மக்களை அவள் கவர்ந்திருந்தாள்.

பூநகரி முகாம் தகர்ப்புக்கான பயிற்சி.

மிகவும் சிரமம் நிறைந்த பயிற்சி அது. ஒரு மணிவரை தினமும் நித்திரை விழிக்க வேண்டும். சேற்றுக்குள் ஓடித்திரியவேண்டும். ஆனாலும் அவர்கள் மகிழ்ச்சியாகவே இருந்தார்கள்.

குறிப்பாக தயாளினி மிகவும் மகிழ்ச்சியாகவே இருந்தாள். வழமைக்குமாறாக தானும் சேர்ந்து பகிடிகள் கதைத்தாள். அவளைப்போல் கதைத்துக் காட்டுவோருக்கு மீண்டும் அவர்களைப்போல் கதைத்துக் காட்டிப் பகிடி பண்ணினாள்.

ஒரு நாள் இரவுநேரப் பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பலத்த மழை ஆரம்பமாகிவிட்டது. தனது வோக்கி நனையும் என்பதற்காக கட்டடம் ஒன்றினுள் ஓடிச்சென்று புகுந்து நின்ற இவள் நித்திரையாகிவிட்டாள். தாக்குதல் பயிற்சி ஆரம்பித்து இவளின் தொடர்புக்காக எடுத்த முயற்சி எல்லாம் கைவிடப்பட்டு இறுதியில் நேரடியாகச் சென்று பார்த்து இவளைக்காணாது தேடி இவளைக்கண்டுபிடித்த அடுத்தநாள் இவள் பொறுப்பாளரிடம் தண்டனை வாங்கியபின், இவளின் சகதோழிகள் இவளை ''என்ன ஏன் தொடர்பு எடுக்கேல்லை ..?' எனக் கேட்டதற்கு ''ஆமிக்குக் கிட்டப் போய்விட்டோம். என்னண்டு கதைக்கிறது ...... அதுதான் தொடர்பு எடுக்கேல்லை ... ...'' என பகிடியாகக்கூறினாள்.

அவர்கள் பாடுபட்டு எடுத்த பயிற்சியைச் செயலில் காட்டும் அந்த நாளும் வந்தது.

பூநகரி முகாமில் மகளிர் அணிக்கெனத் தரப்பட்ட பகுதியில் வீதிக்கு இடதுபக்க அணிக்கு தயாளினி தலைமை தாங்குகிறாள்.

மிகவும் சிரமமான பயணங்கள். நகர்வுகள் கூட உறுதியின் காரணமாக விரைவில் செய்து முடிக்கப்படுகின்றன.

போர் ஆரம்பமாகியது.

துப்பாக்கி வேட்டுக்களுக்கும், குண்டுச் சத்தங்களுக்கும் நடுவே வோக்கியில் கதம்பமாய் பல குரல்கள் ஒலித்தன. சிறிது நேரம் கழிந்திருக்கும். மகளிர் படையின் பகுதிக்குரிய தாக்குதலைத் தலைமையேற்று நடத்திக்கொண்டிருந்த சிறப்புத் தளபதி ஜனாவை வோக்கியில் அழைத்த தயாளினி,

''நாங்கள் ''பவள்'' கவசவாகனத்தின் மேல் நிற்கின்றோம் . ....'' எனக் கூச்சலிட்டாள்.

தாக்குதல் தொடர்ந்தது. தயாளினியும் நிலைமைக்கு ஏற்றவாறு ஜனாவின் கட்டளைகளைக் கேட்டு தாக்குதலைத் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

பொழுது புலர்ந்தது. சூரியன் மெல்ல மெல்ல மேல் எழுந்தது 'வெற்றியைப்பார்க்க விரும்பினாலும் வேங்கைகளின் இழப்பை எப்படிப்பார்ப்பேன்' என்று சொல்லுவது போலிருந்தது.

பகல் சண்டையின் நடுவே 9-30 மணியிருக்கும். தயாளினியின் குரலை வோக்கியில் காணவில்லை .. சிறிது நேரத்தில் வயிற்றில் காயம்பட்ட நிலையில் இருவரின் கரங்களின்மேல் தயாளினி . ''என்ரை றைபிளையும் வோக்கியையும் எடுங்கோ - ....'' அவளின் வாய் மெல்ல இவ்வாறு கூறிக்கொண்டிருந்தது.

காயப்பட்டவர்களை ஏற்றும் வாகனம் வரும் வரை ஒரு இடத்தில் காயப்பட்டவர்களை வைத்திருந்தோம். ஆனால் வாகனம் வருவதற்கு முன்னரே அவளின்தலை துவண்டு இந்த மண்ணை ஆசையுடன் முத்தமிட்டது.

எமது வெற்றியைக்கூடக் கருதாமல் கலங்கிய கண்ணுடனும் இறுகப்பற்றிய துப்பாக்கியுமாக ''தயாளினி அக்காவுக்கு என்னமாதிரி?'' எனக் கேட்ட அவளின் குழுப்பிள்ளைகளைப் பார்க்க அவளின் ஆவி நிச்சயம் இங்கிருந்திருக்காது. மூதூருக்குப் பறந்திருக்கும்.

இவள் மட்டுமல்ல இவளைப் போன்ற இன்னும் எத்தனையோ போராளிகளின் ஆசைக்கிணங்க, தென்தமிழீழ மக்கள் தமிழீழ விடிவின் பின் நிம்மதியாய் தமது மண்ணில் வாழும்காலம் வெகு தூரத்திலில்லை.

# தமிழீழச் சட்டக் கோவை

## பெண்களின் உரிமைகளை எப்படிப் பாதுகாக்கின்றது

தமிழீழ மக்களுக்குச் சரியான முறையில் நீதி வழங்கும்முகமாக தலைவரின் பணிப்புரையின் பேரில் தமிழீழ நீதி மன்றங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன.

நீதி கோரும் மக்கள் சுரண்டப்படுவது இங்கே தவிர்க்கப்படும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியானது விரைவாகவும் எளிதாகவும் கிடைப்பது இங்கே உறுதிப்படுத்தப்படும். இந் நீதிமன்றங்களில் ஏழை, பணக்காரன் வேறுபாடுகளோ, பால் வேறுபாடுகளோ பார்க்கப்படுவது கிடையாது. இதுவரை காலமும் இங்கே சிவில் நிர்வாகம் சீர்குலைந்து போயிருந்ததால் தமது பிணக்குகள் தீர வழியின்றித் தவித்த மக்களுக்கு இந் நீதி மன்றங்கள் கொடையாக அமைந்துள்ளன. அதே நேரம் ஒட்டுமொத்தமாக தேசிய ஒடுக்குமுறையை அனுபவித்தாலும் பிரத்தியேகமாக சமூக, ஆணாதிக்க ஒடுக்குமுறைகளுக்குள்ளும் உட்படும் ஈழப் பெண்ணினத்துக்கு இந் நீதிமன்றங்கள் பெருங்கொடைதான்.

ஏனெனில் இந்த மண் விடுதலை பெறும்போது, ஈழப் பெண்ணினமும் விடுதலை பெற்றிருக்கவேண்டும் என்ற நோக்கங்கொண்ட தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இந்நீதிமன்றங்கள் இயங்குகின்றன. எனவே தமது பிணக்குகளை நீதிமன்றத்துக்குக் கொண்டு போனால் சரியான தீர்வு கிடைக்குமா, அல்லது அங்கும் தாம் ஏமாற்றப்படுவோமா என்று பெண்கள் எவரும் பின்வாங்க வேண்டியதில்லை. இங்கே பெண்களின் பிரச்சினைகள் ஆழமாக நோக்கப்படும்; சரியான முறையில் அணுகப்பட்டு நீதி வழங்கப்படும்.

எமது இயக்கத்தின் நீதி நிர்வாகத்துறையால் 1993 ம் ஆண்டுவெளியிடப்பட்ட தமிழீழச் சட்டக்கோவையில், பெண்களின் உரிமைகளை நிலைநாட்டும் முகமாக சில சட்டங்கள் எழுதப்பட்டுள்ளன.

உதாரணமாக

'ஒரு பெண்ணைத் திருமணம் செய்வதாக நம்பிக்கையூட்டி, வாக்குறுதி கொடுத்து அதன்மூலம் அப்பெண்ணுடன் 'சட்டரீதியான திருமணம் செய்யாமலே' குடும்பமாக வாழ்ந்தவர், அல்லது அவர் அவ்வாறு வாழ்வதாக மற்றவர்கள் நம்பும்படி நடந்தவர் தொடர்பாக அப்பெண் நீதிமன்றம் சென்று அவரைத் தனக்குத் திருமணம் செய்து வைக்கும்படி கோரினால், இருவரையும் திருமணம் செய்துகொள்ளுமாறு நீதிமன்றம் கட்டளையிடலாம். அல்லது அவருக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருப்பதாக நீதிமன்றம் கருதினால் ரூபா 50,000. 00 க்கு மேற்படாத இழப்பீடு செலுத்துமாறு கட்டளையிடலாம். அத்துடன் நீதிமன்றம் நியாயமெனக் கருதினால் மாதந்தோறும் ஜீவனாம்சம் செலுத்துமாறு கட்டளை இடலாம்.'

என்ற இடத்தைக் குறிப்பிடலாம். இது ஒரு ஆணிடம் தனது அறியாமை காரணமாக உறவு வைத்துக் கொண்ட ஒரு பெண்ணுக்கு நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டது. ஆனால் இப்படி ஒரு சட்டம் எழுத்தில் இருக்கின்றது என்பதால் ஆண்கள் ஏமாற்றாமலோ அல்லது பெண்கள் ஆண்கள்மீது அதிகளவு நம்பிக்கை வைத்து உறவு கொண்டபின் ஏமாறாமலோ இருக்கப்போவதில்லை. எனவேஇச்சட்டத்தின் வெற்றி பெண்களின் புத்திசாலித்தனமான நடவடிக்கைகளில்தான் தங்கியிருக்கின்றது.

நீண்டகாலமாக ஒடுக்குமுறைப் பிடிக்குள் இறுகிப் போயிருந்து, இப்போதுதான் மெதுமெதுவாக நிமிர்ந்து கொண்டிருக்கும் பெண்களில் எல்லோரிடமுமே எல்லா விடயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து முடிவெடுக்கும் திறன் இல்லை என்பது பெரும்பாலும் உண்மையே. ஆராய்ந்து முடிவெடுக்கும் பெண் நிமிர்ந்து நிற்கின்றாள். ஆராயாது நம்பிக்கை வைக்கும் பெண் நிமிரமுடியாமல் விழுந்துபோகிறாள். இதுதான் இங்கு நீண்ட காலமாக நடந்துவருகின்றது. 'பாலியல் உறவு நடந்ததன் பின்னர் நான் ஏமாற்றப்பட்டேன்' என்று தமிழீழ நீதிமன்றத்தில் வந்து நீதி கேட்பதற்குப் பல பெண்கள் தயங்குகிறார்கள். நீதி பெறவும் வழியில்லாமல், தமக்கு நேர்ந்த அநீதியைச் சகித்துக்கொள்ளவும் முடியாமல் தமக்குள்ளேயே புகைந்து கொள்கின்றார்கள்.

ஏனெனில் இவர்களை ஆணாதிக்கக் கருத்துலகம் சிறைப்படுத்தி வைத்திருக்கின்றது. தனக்கு நேர்ந்த அநீதியை எதிர்த்து. நீதி கேட்கும் பெண்ணை 'ஒழுக்கம் கெட்டவள்' என்று குற்றம் சாட்டியிருக்கின்றது. நடந்து முடிந்த உறவுக்கு அப்பெண்ணின் நடை, உடை, பாவனைகளே காரணம் என்று பொய்க் காரணங்களைக்கூறி பலவந்தமாக நியாயப்படுத்தி இருக்கிறது. இது பெண்களுக்கு மேல் போடப்பட்டுள்ள மிகப் பலமான அழுத்தம். நிமிர முடியாவண்ணம் விழுந்த மிகப் பெரிய அடி.

இதைவிட காலங்காலமாக 'ஆண்கள் உயர்ந்தவர்கள்; வீரர்கள்: நம்பினால் கைவிடமாட்டார்கள்' என்ற கருத்தும் இவர்களிடம் திணிக்கப்பட்டிருக்கிறது. இதனால் உண்மையான அன்புடன் தன்னிடம் பழகும் ஆண் யார், ஏமாற்றும் நோக்கில் பழகும் ஆண் யார் என்பதைப் பெரும்பாலான பெண்கள் அறிந்து கொள்ளமுயல்வதில்லை.

அண்மையில் தமிழீழ நீதிமன்றத்துக்கு வந்த வழக்கொன்றை இவ்விடத்தில் குறிப்பிடலாம் என நினைக்கின்றோம்.

### மலைமகள்

வழக்குத் தாக்கல் செய்த பெண்ணின் வாக்குமூலத்தின்படி......

அவள் மூன்றாம் வகுப்பு வரை மட்டும் படித்த பதினாறு வயதுப் பெண், இவள் ஒரு வீட்டில் கூலிவேலை செய்து உழைப்பவள். அந்த வீட்டின் சகல வேலைகளையும் செய்வதற்காக மாதாந்த ஊதியம் பெறுபவள். அந்த வீட்டுக்காரரின் மகன் ஒருவன் இப் பெண்ணை ஒரு தடவை பாலியல் வன்உறவுக்கு உட்படுத்தினான். முதல் தடவை அதிர்ச்சியடைந்த அப் பெண்ணை, அதன் பின்னர் பின்னர் பல தடவைகள் உணர்வுகளைத் தூண்டிவிட்டு ஆசை வார்த்தைகள் கூறி பாலியல் உறவுக்குச் சம்மதிக்க வைத்து உறவு கொண்டான். இது எண்ணற்ற தடவைகள் தொடர்ந்தது. வீட்டிலே யாருமே இல்லாத நேரத்திலே தனது அறையில் வைத்தே அப்பெண்ணுடன் அவன் உறவுவைத்தான். ஆனால் இப்படி ஒரு உறவு இருப்பது யாருக்குமே தெரியக்கூடாது என்பதில் அவன் மிகக் கவனமாக இருந்தான்.

மூன்றாம் நபர் முன்னிலையில் அவளுடன் கதைப்பதுமில்லை: அவனின் வீட்டிலே பின்புறத்தில் கூலிக்கு ஆட்கள் வந்து, கிடுகு இழைப்பது உண்டு. அந்தச் சமயங்களில் அவன் அங்கு நிற்கும் எல்லோருடனும் கதைப்பான். அவளுடன் மட்டும் கதைப்பதில்லை.

தங்களுக்கிடையில் இவ்வாறான ஒரு உறவு இருப்பதாக வெளியில் யாருக்குமே சொல்லக்கூடாது என்று அவளை எச்சரித்திருந்தான். அப் பெண் தான் கர்ப்பமாக இருப்பதை அவனிடம் சொன்னபோது, அதையும் யாரிடமும் சொல்லவேண்டாம் என்று எச்சரித்து விட்டான். அப்படிச் சொன்னால் தான் மரத்திலிருந்து (பனையில் கள்சீவும் தொழில்செய்பவன்) குதித்துத் தற்கொலை செய்துவிடுவேன், நஞ்சு குடித்து இறப்பேன் என்று மிரட்டியிருந்தான். அவன் சொன்ன எல்லா நிபந்தனைகளையும் ஏற்றுக்கொண்ட அவள் தன் தாய்க்குக்கூட ஒன்றையும் சொல்லாமல் மறைத்துவிட்டாள். இவள் கர்ப்பமாக இருந்தபோது வேறுஏதோ நோய்க்காக இவளைப் பரிசோதித்த மருத்துவர், தாயிடம் இவளது கர்ப்பத்தை அறிவித்தபோது, அப்படி ஒன்றும் இருக்காது என்று அலட்சியம் செய்துவிட்டாள்.

அப்பெண்ணின் உடலமைப்பும் அவள் கர்ப்பமாக இருந்ததை பெரியளவில் வெளிக்காட்டவில்லை. குழந்தை பிறந்தபின்னர்தான் தாய் விழித்துக்கொண்டாள். குழந்தையின் தந்தை யார் என்பதை அதன் பின்னர்தான் அப் பெண் சொன்னாள்.

இது அந்தப் பெண்ணின் பக்கம்.

ஆனால் அந்த இளைஞனோ தனக்கும் அப் பெண்ணுக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்று மறுத்துவிட்டான். இவ் வழக்கு தமிழீழ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட பெண்ணின் சார்பாக எந்தச் சாட்சிகளுமே கிடைக்கவில்லை. 'ஒருவருக்குமே சொல்லக் கூடாது. சொன்னால் திருமணம் செய்யமாட்டேன்' என்று மிரட்டியிருந்ததால் தங்களுக்கு இடையில் இப்படி ஒரு உறவு இருப்பதைப்பற்றி தான் யாரிடமுமே இனங்காட்டவில்லை என்று அந்தப் பெண் சொல்கின்றாள். அதனால் இன்று தனக்கு எந்தவிதமான ஆதாரமுமின்றி நடுத்தெருவில் நிற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறாள்.

இன்னும் இந்த வழக்கு விசாரணை முடிவடையவில்லை என்பதால் நாம் யாரையுமே குற்றம் சாட்ட முடியாது. ஆனால் ஒரு பெண்ணின் அறியாமை, ஆழமான புரிந்துணர்வின்றி ஒரு ஆணிடம் வைக்கும் அதீதமான நம்பிக்கை அவளை எங்கே கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது என்பதை எல்லாப் பெண்களும் புரிந்து கொள்ள வேண்டும். பாதிக்கப்படுகின்ற பெண்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நோக்கில் நாம் சட்டங்களை அமைத்திருந்தாலும், அவற்றைச் சரியான முறையில் பெண்கள் தான் பயன்படுத்த வேண்டும் என்பதையும் பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

பெண்களின் பாதுகாப்புக் கருதி மேலும் சில சட்டங்கள் தமிழீழச் சட்டக்கோவையில் இடம்பெற்றுள்ளன. அவற்றுட் சிலவற்றைக் கீழே தருகின்றோம்.

பாலியல்வன்முறை

அ) ஒரு பெண்ணின் விருப்பத்துக்கு மாறாக

ஆ) அவளுடைய சம்மதத்தைப் பெறாமல்

இ) அவளைக் கொலை புரிவேன், காயப்படுத்துவேன் என அச்சுறுத்தி அதனால் அவளது சம்மதத்தைப் பெற்று,

(11ம்பக்கம் பார்க்க)



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# நிமிர்வு

1994-03-08 இல் நிகழ்ந்த அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப்போட்டிகளில் இரண்டாவது பரிசைப் பெற்ற சிறுகதை,

(மலரன்னை)

நிமிர்வு

'டமார்!''

காரிருளின் அமைதியைக் குலைத்த அந்தச் சத்தம் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அமுதாவை விழிப்படையச் செய்து விட்டது.

தொடர்ந்து விசும்பல் ஒலி.

படுக்கையில் எழும்பி இருந்தவள், ஒலி வரும் திசையை உன்னிப்பாகக் கவனித்தாள்.

'இதென்ன அம்மாவின்ரை குரல்மாதிரிக்கிடக்கு. அம்மா குசினிக்கை இந்த நேரத்திலைஎன்ன செய்யிறா'

எண்ணமிட்டவள் எழும்பி வந்து குசினியை எட்டிப் பார்த்தாள்.

அங்கே.........

ஜாம்போத்தல் விளக்கின் ஒளியில், அம்மா கைகளால் நெற்றியைப் பொத்திப் பிடித்தவாறு, விசும்பிக் கொண்டிருந்தாள்.

தன்னை நெருங்கி வந்த அமுதாவை அடையாளங் கண்டுவிட்ட அம்மா விசும்பலை நிறுத்திவிட்டு,

''அதொண்டுமில்லைப் பிள்ளை. நீ போய்ப்படு''

சமாளிக்க முயன்றவளின் மீது படர்ந்த பார்வையைச்சற்றுத் திரும்பினாள் அமுதா.

நிலமெங்கும் சோற்றுப் பருக்கைகள் சிதறிக்கிடந்தன. அம்மியின் விளிம்பை முத்தமிட்டவாறு தவழ்ந்து கிடந்த சட்டையும் நோட்டமிட்ட அமுதா நிலைமையை ஒருவாறு ஊகித்துக்கொண்டாள்.

பொங்கியெழுந்த சினத்தை மிகவும் பிரயத்தனப்பட்டு, அடக்கிக் கொண்டாள். எத்தனை இரவுகள் ஒரு பிடி சோற்றுக்கு வழியற்றுப்பட்டினியுடன் படுக்கையில்சுருண்டிருக்கிறாள் அவள். ஏன் அவள் மட்டுமா? குடும்பத்தில் அத்தனை பேருந்தான்.

இப்போது இங்கே .— சிந்திக்கிடந்தசோற்றைக் கண்ணுற்றவளின் வயிறு பற்றி எரிவது போன்ற உணர்வு ஏற்படவே, இந்தச் செய்கைக்குக்காரணமாகியவரைத்தேடி அவளது கண்கள் சுழன்றன.

வாசற்பக்கமாக அவரது குரல் கேட்டது. வார்த்தைகள் தெளிவில்லாமல் வெளி வந்தன.

''எளிய நாய். ஒருமுட்டையெண்டாலும் அவிச்சு வைப்பமெண்டில்லை. வெறும் முருங்கையிலையை வறுத்து வச்சிருக்கிறாள். உவளைச்சும்மா விடக்குடாது''

சொல்லிக்கொண்டே, தடுமாறியவண்ணம் அடி எடுத்து வைத்து அம்மாவை நோக்கி முன்னேறினார். அமுதாவால் இனியும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருக்க முடியவில்லை பொறுமையின் எல்லைக்குத் தள்ளப்பட்டவள்,

''அப்பா! நிறுத்துங்கோ உங்கடை அட்டூழியத்தை. நீங்கள் காசு கைக்குககிடைச்ச உடன குடிச்சுப்போட்டு வந்து நிண்டால், அம்மா என்னெண்டு கறி வாங்கிறதெண்டு நினைப்பு.''

சற்று அதட்டலாகவே நியாயத்தைத் தட்டிக்கேட்டு விட்டாள். "பொத்தடி வாயை. ஆரோடை கதைக்கிற தெண்டில்லாமல் வாய்காட்டுகிறாய் என்ன''

ஓடிவந்த அம்மா, தனது கையில் வைத்திருந்த அகப்பையின் காம்பினால் அமுதாவின் மேனியெங்கும் விளாசித் தள்ளினாள்.

ஒரு கணம் அமுதா நிமிர்ந்து அம்மாவையும், அப்பாவையும் பார்த்தாள்.

அம்மாவின் முகத்தில் விரக்தி

அப்பாவின் முகத்தில் திருப்தி.

மௌனம் அவளைத் தழுவ, கால்கள் படுக்கையை நோக்கி நடந்தன. அம்மாவின் குரல் அவளுக்குத் தெளிவாகக் கேட்டது.

''மாடு மாதிரி வளர்ந்திருக்கிறாள். அடக்கமெண்டது கிடையாது. திமிர் பிடிச்சவள்''

அமுதா, தன்னையே கேட்டுக் கொண்டாள்.

'உண்மையைக் கேக்கிறவை எல்லாம் திமிர் பிடிச்சவையோ?'

அமுதாவுக்கு அம்மா மீது கோபம் ஏற்படவில்லை. மாறாக, அவளது பேதமையை எண்ணிப் பச்சாத்தாபமே ஏற்பட்டது. அம்மம்மா; அம்மாவுக்கு இப்படித்தான் வழிகாட்டி நடந்திருப்பாள். அம்மாவும் அதையே பின்பற்றி நடக்கிறாள். ஆனால் .....நான்...... என்னால இப்பிடி ஒரு வாழ்க்கையை கற்பனை கூடப் பண்ண முடியாது.

நெற்றியைத் தடவிக் கொண்டாள் அமுதா. நெற்றியிலிருந்த தழும்பு அவளுக்கு எதையோ ஞாபகப்படுத்தியது.

அமுதா அந்தக் குடும்பத்தின் மூத்த வாரிசு. அவளுக்குப் பின் நான்கு பெண்களும் இரண்டு ஆண்களுமாய் நீண்டு போய்க் கொண்டிருக்கும் குடும்பம் அது. பாடசாலைக்குப் போய்வரும் நாட்களில் அவள் ஒரு சிட்டுக்குருவி. சிறகடித்துப் பறந்துதிரிந்த அந்த நாட்கள் தான் எத்தனை இனிமையானவை. பசுமையான அந்த நினைவுகள் இப்போதும் அமுதாவின் நெஞ்சில் பசுமரத்தாணியாய் நிலைத்திருந்தன.

பாடசாலையில் இடைவேளை நேரம். பாடசாலை அமைந்திருந்த வளவின் ஓர் மூலையில் பெருவிருட்சமாக ஒரு மாமரம் கிளை பரப்பி நின்றது. அமுதாவுக்கும் அவளது தோழியருக்கும் அந்த மரத்திலிருந்து மாங்காய் பறித்து உண்பதில் தனி இன்பம்.

அன்றும் அப்படித்தான். மரத்தின் உச்சக் கிளையொன்றில், சோளகக் காற்றின் இதமான தழுவலுக்கேற்ப ஆடி அசைந்து கொண்டிருந்த இரு மாங்காய்கள் அவர்களது கண்களில் பட்டுவிட்டன. மாங்காய்களைக் கண்டதுமே அவர்களது நாவில் நீர் சுரக்கத் தொடங்கிவிட்டது. அதைப் பறித்துவிட முயன்றனர். கற்களையும், தடிகளையும் பொறுக்கி அவற்றுக்குக் குறிபார்த்து எறிந்தனர். ஒரு கிளையின் மறைவில் இருந்த மாங்காய்களை, அவை அணுக மறுத்தன.

முயற்சி பலிக்காமல் போகவே, திடீரென அமுதாவின் மூளையில் ஒரு மின்னல் பளிச்சிட்டது. தோழியின் காதுக்குள் எதையோ கிசுகிசுத்தாள். மகிழ்ச்சியுடன் அவர்களும் தலையை அசைத்தனர்.

அமுதா ஒருமுறை சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, மெதுவாகப் பூனையைப் போல் பதுங்கிப் பதுங்கி மரத்தில் ஏறத்தொடங்கினாள். கிளைகளைப் பற்றித் தாவித்தாவி உச்சத்தை அடைந்தவள், மாங்காய்களைப் பறித்து கீழே போட்டாள். மெல்ல மரத்தினின்றும் இறங்கத் தொடங்கினாள்.

பெண்கள் சிலர் மரத்தையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்ணுற்ற ஒரு மாணவன் அருகில் வந்து பார்த்தான். அடுத்த நிமிடம்,

''மரத்திலை ஒரு குரங்கு. எல்லாரும் ஓடியாங்கோ''

பெரிதாக அழைப்பு விடுத்தான். மாணவர் கூட்டம் வந்து கூடுவதற்குள் அவசரமாக இறங்க எத்தனித்த அமுதா, கால் வழுக்கிவிடக் கீழே வந்து விழுந்தாள். விழுந்தவளின் நெற்றியிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

அவ்விடத்திற்கு விரைந்து வந்த ஆசிரியர் ஒருவர், நிலைமையை விசாரித்து அறிந்து கொண்டார்.

''ஏன் மேனே மரத்திலை ஏறினனீ. நீ பொம்பிளைப்பிள்ளையெல்லே?''

அமுதாவுக்கு ஆசிரியரின் அந்தக்கூற்று புரியாத புதிராகத் தோன்றியது. அன்று வீட்டிற்குத் திரும்பிய அமுதாவுக்கு அம்மா அமளியான விருந்தளித்தாள்.

''பரிசு கெட்ட நாய். ஏனடி மரத்திலை ஏறினனீ. மானங்கெட்ட கழுதை''

அம்மாவின் அடிகள் அவளுக்கு நோவை ஏற்படுத்தவில்லை. மாறாக, அவளது பிஞ்சு மனத்தில் ஒரு வன்மத்தை விதைத்து விட்டது.

அன்றே அந்தச் சிட்டுக் குருவியின் சிறகுகள் கத்தரிக்கப்பட்டு, வீட்டிற்குள் முடக்கி வைக்கப்பட்டாள். வீட்டுக்குள்ளேயே வளைய வந்து கொண்டிருந்தாலும்கூட, அவளது சிந்தனைகள் வெளி உலகை வலம் வரத்தொடங்கின. அவளது சிறகுகள் கூட மெதுமெதுவாக முளைவிடத் தொடங்கின.

அமுதாவிடம் அடுத்த வீட்டு ரம்யா அடிக்கடி வருவாள்.

''அமுதாக்கா, இந்த மாலையை ஒருக்கால் வடிவாய்க்கட்டி விடுங்கோ''

கனகாம்பர மாலையை அமுதாவின் கையில் தந்துவிட்டு, தலையைக் குனிந்து கட்டுவதற்கு ஏதுவாக முழந்தாளில் நின்றுகொள்வாள் ரம்யா. அமுதா பூச்சரத்தின் இருமுனைகளையும் தூங்க விட்டுச் சரத்தை வளைத்து கூந்தலில் சொருகி விடுவாள். ரம்யா பூரிப்புடன் அசைந்து அன்ன நடையுடன் போவதை இவளால் ரசிக்க முடிவதில்லை. மாறாக, இவளது சிந்தையில், சென்ற மாவீரர் நாளில் அணிவகுத்துச் சென்ற பெண் போராளிகளின் நிமிர்ந்த தோற்றம் அலையென வந்து மோதும்.

''ம்......''

நீண்ட பெருமூச்சொன்று அவளிடமிருந்து வெளிப்பட்டது. அம்மாவின் நிலையை நினைக்க அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது. இந்த அம்மா ஏன் இப்படிக் கோழையாகக் குனிந்து போகிறாள்? நியாத்தைக்கூடக் கதைக்க முடியாமல், அந்தத் தோல்விகளை மறைத்துக் கொள்ள எனக்குத் தண்டனை வழங்க முயல்கிறாள், ஏன் இப்படி? அந்த இருண்ட பாதாளத்துக்குள் தன்னையே புதைத்துக் கொள்ள எத்தனிக்கிறாள்.

''இந்தப் பரந்த ஆகாய வெளி, அவளது கண்களுக்குத் தெரிவதில்லையா? ஓ...... இந்தப் பரந்த வெளியில் நான் சிறகடித்துப் பறக்கவேண்டும். ஆனால் ...இந்த வான்பரப்பில் இன்னும் ஆதிக்க வல்லூறுகளின் நடமாட்டம் தெரிகிறதே ...... அப்படியானால் - நாம் அணிதிரண்டு ஆதிக்கச் சிறையுடைக்க முனைவது தான் ஒரே வழி. அப்போது தான் எதிர் காலத்திலாவது நாம் சுதந்திரமாய்க் கீதமிசைத்து இந்த வான் பரப்பில் வலம் வர முடியும். தீர்மானத்துடன் அமுதா நிமிர்ந்து போது. —....

யாரோ ஓங்காளித்து வாந்தியெடுக்கும் ஒலி அவளது சிந்தனைத் தொடரைக் கலைத்தது. திடுக்கிட்டவள், உண்மையைப் புரிந்து கொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. 'அம்மா' என்ற 'இயந்திரம்' மீண்டும் ஒரு தரம் தனது பணியைத் தொடங்கிவிட்டதன் பிரதிபலிப்பல்லவா அது.

---

''சீக்கிரமாக ஆகட்டும்'' காமிராவுடன் இருந்த அதிகாரியை நோக்கி கமாண்டென்ட் கத்தினான்.

இந்நிலையில், தான்யா அவனை நோக்கித் திரும்பி அவனுக்கும் ஜேர்மனியப் போர் வீரர்களுக்குமாகக் கத்தினாள்.

''நீங்கள் என்னைத் தூக்கிலிடப் போகிறீர்கள். ஆனால் நான் தனிமையானவள் அல்லள். நாங்கள் இருநூறு மில்லியன்பேர் இருக்கின்றோம். எல்லாரையும் உங்களால் தூக்கிலிட முடியாது. என் சாவுக்குப் பழிவாங்காமல் விடமாட்டார்கள். போர்வீரர்களே, வெற்றி எங்களுடையதுதான். என்சாவுக்குப் பழிவாங்காமல் விடமாட்டார்கள்......''

உள்ளூர் ஆண்களும் பெண்களும் அழுதார்கள். என்ன நடைபெறப்போகிறது என்பதைப் பார்க்கக்கூடாது என்பதற்குச் சிலர் மறுபுறம் திரும்பிக்கொண்டனர்.

தூக்கிலிடுபவன் தான்யாவினுடைய தொண்டையைச் சுற்றி சுருக்கு இடுகிறான். தனது இரு கைகளாலும் முழுபலத்தோடு இழுத்து நுனி விரல்களினால் தன்னை உயர்த்திக்கொண்டு தனது வலிமை அனைத்தையும் ஒன்று திரட்டிக் கத்தினாள்.

''போய்வருகிறேன் தோழர்களே! சண்டையிடுங்கள். பயப்படாதீர்கள்...''

கீழிருந்த சரக்குப் பெட்டியைத் தனது உருக்கு நுனி கொண்ட காலணியால் தூக்கிலிடுபவன் தள்ளிவிட, அது நழுவி பனியில் விழுந்தது. மேற் பெட்டி கவிழ்ந்து பெரும் ஓசையுடன் தரைமீது விழுந்தது. கூட்டத்தினர் அச்சத்தால் பின்வாங்கினர். யாரோ அலறினான். இந்த அலறல் காடு முழுக்க எதிரொலித்தது.

அவள் எதிரியின் பிடியில், நாஜியின் தூக்கு மேடையில் மாண்டாள். தனது துயரத்தையோ தனது தோழர்களையோ அவள் காட்டிக்கொடுக்கவில்லை. கொள்கைத்தியாகியினுடைய சாவு அவளுக்கு நேர்ந்தது. ஒரு வீரனைப் போல மரணமடைந்தாள். எந்த நெறியாளனுக்கும் ஒருபோதும் கீழ்ப்பணியாத நாட்டு மக்களின் உண்மை மகளைப் போல மடிந்தாள். அவளது நினைவு என்றும் நிலைக்கட்டும்.

-மாஸ்கோச் சண்டை
மாபெரும் தேசபக்தப் போரின் கதைகள்
(1941 - 1945)

# நாட்டின் நற்குடிகளை உருவாக்கும் பாலர் கல்வி

## —விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் முக்கிய இலக்குகளில் ஒன்று—

ஒரு சமூதாயத்தின் ஆணிவேர் குழந்தைச் செல்வங்களாகும். அவர்களை உரிய பருவத்தில் பண்பட்ட உள்ளத்தினராயும் தேக ஆரோக்கியம் உள்ளவராயும் வளர்ப்பது எம் எல்லோரினதும் கடமையாகும். இதை நோக்காகக் கொண்டே 'பாலர் கல்வி' எனும் திட்டம் உலகெங்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றது.

பொருளாதார வளர்ச்சி குன்றியும் முன்னேற்றம் அடையாத கிராமமாகவும் இருக்கும் இடங்களை அவதானிக்கும்போது, அங்கு பாலர் கல்வி முன்னெடுத்துச் செல்லப்படவில்லை என்பது தெரிகிறது. இதை உணர்ந்து தான் ஏறத்தாழ கடந்த பத்து வருடங்களாக பல அமைப்புக்கள் பின் தங்கிய கிராமங்கள்தோறும் பாலர் கல்வியை அறிமுகம் செய்து ஓரளவு நடைமுறைப்படுத்தி வருகின்றன. தம் சந்ததி சிறீலங்கா அரசின் இறுக்கமான பிடிக்குள் சிக்கி அழிந்துவிடக்கூடாது என்ற அக்கறைகொண்ட கல்விமான்களும், சமூகசேவையை நோக்காகக் கொண்ட பொது நிறுவனங்களும், அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களும், மதச் சார்புடைய அமைப்புக்களும் பாலர் முன் கல்வியை நடைமுறைப்படுத்தி வருகின்றன.

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு தனது சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 'பாலர்கல்வி' என்னும் பாரிய திட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்றது. தமிழீழத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் பாலர் பாடசாலைகள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 1991-ம் ஆண்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் யாழ்ப்பாண மாவட்டத்தில் [illegible] பெண்களுக்கு சமூக மேம்பாட்டுப் பயிற்சியும், பாலர் கல்விப் பயிற்சியும் அளிக்கப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இதே காலப் பகுதியில் தமிழீழத்தின் ஏனைய மாவட்டங்களிலும் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டன.

பின்தங்கிய கிராமங்களிலே, வறுமையிலே வாடும் பெற்றோரிடமிருந்து, எந்த உதவியையுமே எதிர்பார்க்காமல், குழந்தைகளின் நலனில்மட்டுமே கவனம் கொண்டு பல சிரமங்களின் மத்தியிலே எமது இப்பணி ஆரம்பமாகியது. பலதரப்பட்ட பொது நிறுவனங்கள் பாலர் ஆசிரியர்களுக்கு மூன்று மணித்தியால சேவைத் திட்டத்துக்கு ரூபா முந்நூறுக்குக் குறைந்த தொகையை ஊக்குவிப்புத்தொகையாக வழங்கி வந்தன. அதே கால கட்டத்தில் எம்மால் பயிற்றுவிக்கப் பட்ட ஆசிரியைகளுக்கு நாம் ரூபா ஐந்நூறை வழங்கிவந்தோம்.

பாலர் கல்வியானது பலரது கவனத்தையும் கவரும் வகையில் உருவாக்கப்பட்டு உள்ளது. பல வேறுபட்ட அமைப்புகள் வெவ்வேறு விதமான முறையில் செயற்பட்டாலும் 'திணிப்பு இல்லாத, பாலர்களின் மனதைக் கவரும் சுதந்திரமான சூழலில் பாலர்கல்வி வளர்த்தெடுக்கப்படவேண்டும்' என்ற கருத்து எம்மால் வலியுறுத்தப்பட்டு, செயற்படுத்தப்பட்டு வருகிறது. நாம் தவிர்ந்த ஏனைய எல்லா அமைப்புக்களும் ஒருங்கிணைந்து ஒரு பாலர் கல்வித் திட்டத்தின்கீழ் பாலர் பாடசாலைகளை இயக்க முன்வரவேண்டியது ஒரு கட்டாயத் தேவையாகின்றது.

1993-ம் ஆண்டிலிருந்து மிகக் கூடுதலான பாலர் பாடசாலைகள் தமிழீழமெங்கும் உருவாகியுள்ளன. பாலர் கல்வியின் பிரதான நோக்கங்களாகப் பாலர்கள் பாடசாலை செல்லும் பழக்கத்தினைப் பெறப்பயிற்சி பெறுதல், பார்த்தல், கேட்டல், தொட்டு உணர்தல் ஆகிய புலனுணர்வுகளை வளர்த்தெடுத்தல், சுகாதார நற்பழக்கவழக்கங்களையும் அறிவுரைகளையும் புரிந்துகொள்ளவைத்தல், நாளாந்த தேவைகளுக்கான கணிதத்திறன்கள் எண்ணக்கருக்களை வளர்த்தெடுக்கத் தூண்டிவிடுதல், சூழல் தொடர்பான அறிவு வளர்ச்சி பெறும் உளப்பாங்கினை ஏற்படுத்துதலும் ஆக்கசிந்தனையைத் தம் மொழிமூலம் விருத்தி செய்யத்தட்டி எழுப்புதலும், அழகினையும் அழகியல் சம்பந்தமான கலைகளையும் வெளிப்படுத்தக் குழந்தைகளின் ஆற்றலையும் திறமையையும் இனம்கண்டு ஊக்குவித்தல்.

சகோதரத்துவம், அன்புணர்வு, பெரியோர்களை மதித்தல், பேணுதல் போன்ற பொதுச்சமூகப் பண்பாடுகளை வளர்த்தெடுத்தல், வீடு, பாடசாலை, பொது இடங்களைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய கடமையுணர்வு, ஒத்துழைப்பு பற்றிய நற்சிந்தனைப் பண்புகளை ஊட்டுதல், நாட்டுப்பற்று, மொழிப்பற்று தொடர்பான உளப்பாங்குவளர ஏற்ற சூழலை உருவாக்கிவழிகாட்டல், இத்தோடு உடல் - உளவிருத்திக்கான உடற்பயிற்சி விளையாட்டுக்களில் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் விருத்தி செய்தல் என்பவை அமைந்துள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக, எதிர்காலத்தில் பாடசாலை சென்று கல்விகற்கும் ஆவலையும் அதன் பயன்பாடுகளையும் வளர்த்தெடுக்கும் மிகப் பெரிய பொறுப்பினைப் பள்ளிமுன் கல்வி முடுக்கிவிடுகின்றது. இக்கல்வித் திட்டத்தைக் கிராமங்கள் தோறும் வளர்த்தெடுப்பதில் பல சிக்கல்களை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. பாடசாலைக்கு ஏற்ற சூழலைத் தெரிவுசெய்தல், கட்டிடவசதி, தளபாடங்கள், குடிநீர், மலசலகூடவசதி, விளையாட்டுமைதானம், கல்விஉபகரணங்கள், சத்துணவுத்திட்டம் முதலிய நிறைவுகளை முழுமையாக உள்டக்கி, எல்லாப் பாலர் பாடசாலைகளையும் வழிநடத்தப் பொருளாதார வசதிக்குறைவும், சில இடங்களில் பெற்றோர்களின் ஒத்துழைப்பு இன்மையும் காரணமாக அமைகின்றன அப்படி இருந்தும் சில வறிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு பாலர்கல்வி அளிக்கப்படுவதோடு சத்துணவும் வழங்கி சிறுவர் பராமரிப்பு நிலையங்களும் அமைத்துச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

தற்போது யாழ் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய ஒன்பது கிராமங்களில் சிறுவர் போசாக்கு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மூன்று நிலையங்கள் விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றன. இங்குள்ள குழந்தைகள் முழுக்கமுழுக்கக் கூலிவேலை செய்யும் வறிய குடும்பத்துக் குழந்தைகளாகும். இவர்களது உணவு, உடை, சுகாதாரவசதி, போசாக்கு என்பன இங்கு பேணப்படுகின்றன. இங்கு வாழும் குழந்தைகள் தன்னம்பிக்கை உடையவர்களாக, பொதுஅறிவைப் பெற்றவர்களாக, சமூகநீதி உள்ளவர்களாக ஒரு நல்ல மனிதராக உருவாக வசதிகள் அளிக்கப்பட்டுக் கல்வியும் ஊட்டப்படுகின்றது. காலை ஏழுமணியில் இருந்து மாலை ஆறுமணிவரை இக்குழந்தைகள் போசாக்கு நிலையங்களில் பூரண அரவணைப்பைப்பெற்று மகிழ்ச்சியோடு வாழ்கிறார்கள்.

சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் மற்றும் ஓர் அம்சமாக சத்துணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.



எம் தாயகத்தில் கிடைக்கும் மூலப் பொருட்களான அரிசி, உழுந்து, கௌபி, எள் ஆகிய சத்தூட்டம் நிரம்பிய தானியங்களைக் கொண்டு மிகவும் சுத்தமாகவும் சுகாதார முறையிலும் சுவையாகவும் குழந்தைகள் விரும்பிச் சாப்பிடவும் இலகுவில் சமிபாடடையக் கூடியமுறையிலும் தயாரிக்கப்பட்டுவருகிறது. சத்துணவு வழங்கும் நடைமுறையைப் பின்பற்றுவோர்கள், எம்மிடமிருந்து சத்துணவை விலைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

பள்ளிமுன் கல்வி நிலையங்களும் பொது நிறுவனங்களும் தமக்குச் சத்துணவு தேவையானால் முன்கூட்டியே அறிவித்து தமக்குத் தேவையான அளவில் சத்துணவைப் பெற்றுக் கொள்ளலாம்

யாழ் மாவட்டத்தில் மட்டும் தற்பொழுது நான்காயிரத்துக்கும் (4000) மேற்பட்ட பள்ளிமுன் கல்வி மாணவர்களுக்கு விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பின் சமூகமேம்பாட்டுத் திட்டத்தினர் பள்ளிமுன்கல்வியை அளித்து வருகின்றனர். நூற்றுத் தொண்ணூற்றெட்டு (198) ஆசிரியைகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு, நூற்று இருபத்தெட்டு (128) பாடசாலைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பாலர் ஆசிரியர்கள் ஆற்றும் சமுதாயப் பணியானது தமிழீழத்தின் எதிர்காலத்தை பலமாகக் கட்டி எழுப்பக் கூடியதாகும். தற்போதைய போர்ச்சூழல் குழந்தைகளில் உளவியல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதை அறியக்கூடியதாகவுள்ளது. இத்தனைக்கும் முகம்கொடுத்து முழுக்க முழுக்க சேவை மனப்பான்மையோடு

(11 ம் பக்கம் பார்க்க)

**தணிகைச் செல்வி**

நல்லூர் கிளைநூலகம்.



# நாம் கடந்து

ஐயா விரைவாக தன் கண்ணுக்குத் தெரிந்த போராளிகள் எல்லாருக்கும் குனிந்து குனிந்து சென்று ஒரு கவளம் உணவையும் தேநீரையும் கொடுத்து விட்டு குனிந்தவாறே வந்த வழியில் ஓடிச் சென்றதை நன்றிஉணர்வோடு பார்த்துக் கொண்டோம்.

மரணத்தை எதிர்கொண்டு நின்ற வேளையில் கூட நாங்கள் பகிடியையும் சிரிப்பையும் விடவில்லை. ஒரு தம்பி எனக்கருகில் நிலை எடுத்திருந்தான். எதிரியின் நிலையில் இருந்து கனரக ஆயுதத்தின் ரவைகள் எம்மை நோக்கி வரும். இந்த நேரத்தில் இந்தத் தம்பி அடிக்கடி ''ஐயோ அக்கா எனக்கு ரவை துளைச்சுட்டுது'' என்பான் நாங்கள் ''எங்கே பார்ப்போம்'' எனக் கேட்டு ஊர்ந்து கொண்டு கிட்டப் போக '' நான் சும்மா சொன்னனான்'' என்று சிரிப்பான். அத்தோடு என் சகதோழி கப்டன் அஞ்சனா காவோலையைத் தூக்கி தனக்கு முன்னால் பிடித்திருப்பாள். ''உது என்னடி?'' என்று கேட்டால், ''எனக்கு ரவைதுளைக்காமல் பாதுகாப்புக்கவசம்'' என்பாள். விழுந்து விழுந்து சிரிப்போம். ரவைபட்டு விட்டது என அடிக்கடி பகிடி விட்ட தம்பி ஒரு முறை"ஐயோ அக்கா'' என்றான். அவன்பகிடிக்கு கத்துகின்றான் என எண்ணிப் போகாமல் இருந்த போது மேலும் ''ஐயோ அக்கா, என்னைத் தூக்கிக் கொண்டு போங்கோ'' எனக் கத்தினான். மீண்டும் இவன் பகிடிக்கு கத்துகின்றான் என நினைத்த வேளையில் எனது உடையில் ஏதோ வித்தியாசம் தெரிய, என்ன வென்று பார்த்தேன். அவனது இரத்தம் துளித் துளியாக என் உடையில் தெறித்திருந்தது. உடனேயே அவன் அருகில் சென்று நானும் என் சகதோழியும் வெளியில் அவனை நிமிர்ந்து தூக்கிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தோம். அவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு அவசரத்தில் நாம் நிமிர்ந்தவாறு ஓடினோம் இந்த நேரத்தில் எதிரிக்கு எமது நிலைகளை காட்டிக் கொடுக்காமல் மறைவாக நிலையெடுத்திருந்த போராளிகள் ஆத்திரத்தோடு ''எடியே, ஏன்ரி நிமிர்ந்து கொண்டு போறியள்? குனிந்து ஊர்ந்து போங்கோடி'' என்று ஏசினார்கள். நாங்கள் இதையெல்லாம் காதில் வாங்காமல் அந்தப் போராளியை உயிர் தப்ப வைக்க வேண்டும் என்ற வேகத்தோடு போய்க்கொண்டிருந்தோம். இடையிடையில் ''அக்கா, அக்கா'' எனஅவன் முனகிக்கொண்டிருந்தான்.

அவன் எம் அருகில் நிலையெடுத்திருக்குபோதுகூறிய கதைகள் எல்லாம் அவன் என் தோளில் இருந்தபோது என் நினைவில் நிழலாடின. அவன் திருகோணமலையைச் சேர்ந்தவன். திருகோணமலையின் சூழ்நிலைகளையும் திருமலை மாவட்டத்தில் எமது மக்களுக்கு நடந்த இலங்கை இராணுவத்தின் கொடுமைகளையும் கொடூரங்களையும், அட்டூழியங்களையும் விபரித்துக் கூறினான். இடையில் சிரித்துவிட்டு கொலரை இழுத்துவிட்டவாறு சொல்வான், ''எங்கட தமிழீழத்தின் தலைநகரம் திருகோணமலைதான். சொல்வதை வடிவாகக் கேளுங்கள்,'' என்று தொடர்வான். தான் இயக்கத்துக்கு வந்ததையும் தன் குடும்பத்தைப் பற்றியும், தான் வீட்டில் செய்கின்ற குறும்புகள் பற்றியும் சொல்வான். பிறகு சொல்வான் ''அம்மாவுக்குச்செய்த குறும்புக்குத்தான் இப்ப பட்டினி கிடக்கிறன்'' என்பான். உண்மையில் அவன் சரியான குறும்புக்காரன்தான். திடீரெனப் பழைய நினைவுகள் கலைய இவனைப் பார்த்தேன். அசைவையே காணவில்லை. அவன் எங்களின் தோள்களிலேயே வீரச்சாவைத் தழுவிவிட்டிருந்தான். எங்களை அறியாமல் எங்களின் கண்கள் அந்த மாவீரனுக்கு கண்ணீர் வணக்கம் செய்தன. நிகழ்ந்திடும் சோகங்கள், தொடர்ந்திடும் மரணங்கள் எங்களை தளர்வடையச் செய்யாது. இந்தச் சோகங்களாலும், சாவுகளாலும் நாங்கள் மேலும் மேலும் உறுதியடைவோம் என எண்ணிக் கொண்டு மீண்டும் எங்களுடைய நிலைகளுக்கு எதிரியை அழித்தொழிக்கும் வேகத்துடன் விரைந்து சென்றோம்.

மூன்றாம் நாள் எதிரியின் கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் மீண்டும் முன்னேறினோம். எதிரியின் அரணிலிருந்து ஏறத்தாழ ஐம்பது யார் தூரத்தில் நிலை எடுத்திருந்தோம். இரவு கட்டாயம் எதிரியின் எல்லையுள் நுழைந்து தளத்தைத் தகர்க்க வேண்டும் என்று எமக்குக் கூறப்பட்டிருந்தது.

இந்த நேரத்தில் சேற்றிலும், சகதி நீருக்குள்ளும், நெல் சுணைக்குள்ளும் நுளம்புக் கடிக்குள்ளும் மூன்று பகலும் ஒரு இரவும் இருந்ததால் எனக்கு சரியான காய்ச்சல் அடிக்கத் தொடங்கிற்று. உடனே சோதியாக்கா மாத்திரையை எடுத்து வயலில் தேங்கி நின்ற நீருடன் விழுங்க வைத்தார். இரவானதும் காய்ச்சல் எனக்கு ஓரளவு தணிந்து விட்டது.

மூன்றாம் நாள் இரவு தாக்குதலை மீண்டும் ஆரம்பித்தோம். தாக்குதல் மிகக் கடுமையாக இருந்தது. நாங்கள் எதிரியைத் தரைவழியாக மட்டும் தாக்கிக் கொண்டிருந்தோம். ஆனால் எதிரியோ விமானத்தாக்குதல், எறிகணைத் தாக்குதல் என்று கடுமையாகத் தாக்கினான். நாங்களும் வேகமாக முன்னேறித் தாக்கினோம். வயல் வரம்புகள் மட்டுமே எமக்குக் காப்பரணாக இருந்தது. நாங்கள் பல பக்கங்களாலும் சென்று எதிரியைத் தாக்கினோம். ஒரு பக்கத்தில் நாங்கள் பத்துப்பேர் இராணுவநிலையிலிருந்து இருபது யார் தூரத்தில் படுத்திருந்து எதிரியைத் தாக்கிக் கொண்டிருந்தோம். எங்களுக்கு காப்பரண் இல்லாததனால் நிலத்தோடு முகத்தைச்சரித்துவைத்துக்கொண்டே தாக்குதலைத் தொடுத்துக் கொண்டிருந்தோம். மெதுவாக தலையைத் தூக்கினால்கூட நெற்றியில் வெடி விழும் இதில் எங்களோடு வந்த போராளிகள் நால்வர் எதிரியை அவதானிக்க மெதுவாகத் தலையை தூக்கியபோது நெற்றியில் வெடியை வாங்கி வீரச்சாவைத் தழுவினார்கள்.

அன்றைய இரவுத் தாக்குதல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அந்த ஒரு இரவில்தான் கல்லுண்டாய் வெளி இராணுவத் தளத்தைத் தகர்த்தோம். எதிரியின் ஆயுதங்களையும் அள்ளி எடுத்தோம் வெற்றியோடு வெளியேறி வந்தோம்.

எங்கள் ஒவ்வொருவரையும் நாங்களே பார்த்துச் சிரித்தோம். உடலெல்லாம் ஒரே சேறு. எங்களிலிருந்து வந்த சேற்றின் நறுமணம் எல்லோரினது மூக்கையுமே துளைத்தது ''இது தான் போராட்டம். இது தான் எங்கள் வாழ்க்கை" எனச் சொல்லிச் சிரித்தோம்

கல்லுண்டாய் வெளித் தாக்குதலைத் தலைமை தாங்கி வழிநடத்திய லெப். கேணல். ஜொனி அண்ணர் ''இனிப் பிள்ளைகள் எல்லாம் போய் குளித்துவிட்டு கொஞ்சம் ஓய்வு எடுங்கோ. அடுத்த சண்டைக்குப் போக வேணும்'' என்று சொல்லி வாய் மூடுவதற்கிடையில், ''சங்கானைக்கு ஆமி வந்து விட்டான்'' எனச் செய்தி வந்தது. அந்த நிமிடமே அடுத்த சண்டைக்காகச் சங்கானையை நோக்கி ஓடினோம், ஓடிக்கொண்டேயிருந்தோம்.

'குளிக்க வேண்டும். உடை மாற்ற வேண்டும். உண்ண வேண்டும். உறங்க வேண்டும்' என்ற எல்லா எண்ணமும் மறந்து 'சங்கானைக்கு வந்த இந்தியனை விரட்ட வேண்டும்' என்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி நிற்க, சங்கானை நோக்கி விரைந்தோம்.

# நாட்டின் நற்குடிகளை

சேவை புரியும் ஆசிரியர்களின் வேதனத்தில் கவனம் கொண்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பானது பாலர் ஆசிரியர்களுக்குத் தற்பொழுது மாதாந்த ஊதியமாக ரூபா ஆயிரத்தை வழங்கிவருகின்றது.

பிஞ்சு வயதில் குழந்தைகளின் ஏக்கங்களுககு வடிகாலாக அமைந்து அவர்களுக்கு அன்பு, பரிவு, பாதுகாப்பு, கண்காணிப்பு வழங்கி, குழந்தைகளோடு குழந்தைகளாகச் சேவைபுரியும் ஆசிரியர்களை மிகவும் தரமான கல்வி ஆற்றல் உள்ளவர்களாக ஆக்க உரியதிட்டங்கள் வழி வகுக்கப்பட்டு, பயிற்சி நெறிகளும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

பாடத்திட்டங்கள் தவணைமுறையில் தயாரிக்கப்பட்டும் வாராந்த நாளாந்தப் பதிவேடுகள், பாடஆயத்தம், பாடக்குறிப்பு போன்ற விடயங்கள் போதிக்கப்பட்டும், பாடசாலை ஆரம்ப நேரம், முடிவு நேரம் வரையறுக்கப்பட்டு, நேர அட்டவணைகள் பாடசாலையில் இடம்பெறவும் பயிற்சி அளிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சிக் கோட்டங்களில் வட்டவை ரீதியாகப் பாடசலை மேற்பார்வையாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு உள்ளார்கள்.

இதனால் பாலர் பாடசாலைகளின் நிறை குறைகள் அறியப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கிராமங்களின் ஒத்துழைப்போடும் பெற்றோர்களின் ஆதரவோடும் பருவகாலங்களையொட்டிய நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகள் என்பன மிகவும் சிறப்பாக நடாத்தப்படுகின்றன.

எம்மிடம் பயின்ற பள்ளிமுன்கல்விப் பாலர்கள் பெரிய பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டதும், அங்குள்ள ஆசிரியர்களினால் பாலர்களின் ஆற்றல்கள் இனங்காணப்பட்டுப் பாராட்டைப் பெறுவதும் எமது திட்டத்துக்குக் கிடைத்த வெற்றியாகும்.

ஒரு குழந்தையின் மனதில் ஐந்து வயதுக்குள் பதியும் அற்புதப் பதிவுகள்தான் அக்குழந்தையை நற்குடியாகவும் ஒரு முழுமனிதனாகவும் ஆக்குகிறது. பிற்காலத்தில் சமூக வளர்ச்சியில் தன்னையும் ஒரு அங்கத்தவனாக இணைத்துச் சமூகம் போற்றும் நன்மகளாக, மகனாக வாழவும் வழி வகுக்கிறது.

எனவே இக் கல்வியினைப் பெறுவதற்கு ஏங்கித் தவிக்கும் சின்னஞ்சிறுவர்களை புழுதியிலும் தெருவிலும் நாம் அலைய விடலாமோ? வசதியுள்ள குழந்தைகள் இக் கல்வியைப் பெற்றுத் துள்ளுநடையோடும் போது, ஒட்டிய வயிறோடும், குழிவிழுந்த கண்களோடும் தெருவிலே உணவுக்காக எம் செல்வங்கள் அலைவதை நாம் அனுமதிக்கலாமோ?

இன்னும் இதனைச் சிந்தித்துப் பார்க்காதவர்கள் பலர் உண்டு. அருகில் பாலர் பாடசாலை இருந்தும் தம் குழந்தைகளை அனுப்பாத பெற்றோரும் உண்டு.

அன்றாடக் கூலிவேலை செய்து உழைத்துப்பிழைக்கும் பெற்றோர்கள் பேணிப்பாதுகாக்க வேண்டிய வயதிலே வேறுவழியின்றித் தம் குழந்தைகளைத் தன்னந்தனியே பசிக்க விட்டுச் செல்கிறார்கள்.

இங்கே அன்பு அரவணைப்பு உணவு, சுத்தம் இன்றிக் குழந்தைகள் சீர்குலைகின்றன. இந்த வாழ்க்கைமுறை நிச்சயமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

அடிப்படைக் கல்வியான பள்ளிமுன் கல்வியை அந்தப் பெற்றோர் பெற்றிருக்காததே இதற்குக் காரணமாகும்.

எனவே ஒவ்வொரு கிராமங்களிலுள்ள நாட்டுப்பற்றாளர்களும் நலன் விரும்பிகளும், பள்ளிமுன்கல்வியை வளர்த்தெடுக்கத் தங்கள் ஒத்துழைப்பைவழங்கி, வளர்ந்துவரும் தமிழீழத்தின் எதிர்கால நற்குடிகளை உருவாக்க முன்வரவேண்டுமென்று அன்புடன் வேண்டுகின்றோம்.

# தமிழீழச் சட்டக்

ஈ) தான் அவளுடைய கணவன் அல்லன் என்று தெரிந்திருந்தும் அவளைச் சட்டப்படி மணம் முடித்த கணவன் தானே என்று அவளை நம்பவைத்து அதன் மூலம் அவளுடைய சம்மதத்தைப் பெற்றும் பெறாமலும்,

உ) பதினான்கு வயது பூர்த்தியடையாத பெண்ணின் சம்மதத்தைப் பெற்றும், பெறாமலும்.

ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்வது பாலியல் வன்முறை எனப்படும்;

இதைவிட

'பாலியல் வன்முறைக் குற்றத்தைப் புரியவெனத் திட்டமிட்டு முன் முயற்சியில் இறங்கியபோதும், ஏதும் ஒரு சூழ்நிலையில் உடல் உறவு நிகழாவிடில் அது பாலியல் வன்முறை எத்தனிப்புக் குற்றமாகக் கருதப்படும் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. மேலே சொல்லப்பட்ட இரு குற்றங்களுக்கும் தண்டனையாக

அ) பாலியல் வன்முறை குற்றம் புரிந்தவர்க்கு ஆகக்கூடிய தண்டனையாகக் மரண தண்டனை விதிக்கப்படும்;

ஆ) பாலியல் வன்முறை எத்தனித்தல் குற்றத்துக்கு ஏழு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்படும்

இ) பாலியல் வன்முறைக் குற்ற உடந்தையாளருக்கு ஐந்து வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

இது தமிழீழப் பெண்களின் உரிமைகளைப் பேணும் வகையில் சட்டரீதியாக எம்மால் வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்பாகும். ஆனாலும் தொடர்ந்தும் பல பெண்கள் இவை போன்ற சிக்கல்களுக்கு ஆளாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இவை சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடர்ந்தும் தாக்கல் செய்யப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன.

இவர்களுடைய வழக்குகளை விசாரித்துவரும் நீதியாளர்களிடம் இதைப் பற்றிக் கதைத்தபோது அவர்கள் ஒரே ஒரு காரணத்தைத்தான் அழுத்தமாகச் சொன்னார்கள். 'தனது அறியாமை யாரோ ஒருவனால் தனக்கே தீமையை உண்டாக்குகிறது என்பதைக்கூடப் பல பெண்கள் அறியாமல் இருப்பதுதான் இதற்குக் காரணம்' என்கிறார்கள்.

பெரும்பாலான பெண்களிடம் இயல்பாகவே உள்ள 'ஆடவருக்கு அடிபணியும் தன்மை' தான், குறுகிய நேர இன்ப நோக்குடன் தம்மை அணுகும் ஆண்களை இனங்கண்டு கொள்ள முடியாமல் செய்துவிடுகின்றது. காலங்காலமாக இலக்கியங்களும், திரைப் படங்களும் ஆண்கள் எல்லேருக்குமே ஒரு 'கதாநாயகன்' இடத்தைக் கொடுத்து வருவதால், அதன் காரணமாக ஆண்களிடம் பெண்களுக்கு ஏற்படுகின்ற கவர்ச்சியால் பல பெண்கள் ஆண்கள்மேல் வைக்கும் அளவற்ற நம்பிக்கை, இந்த நம்பிக்கையால் ஆண்களுக்குப் பெண்கள கொடுக்கும் அளவுக்கதிகமான இடம் - எல்லாமே இறுதியில் பெண்களைத்தான் பாதிக்கின்றது.

இதை எல்லாப் பெண்களுமே தெளிவாகப் புரிந்துகொள்ளவேண்டும். ஒரு பெண் விரும்பியோ விரும்பாமலோ ஒரு ஆணுடன் வைத்திருக்கும் பாலியல் உறவானது வெளிப்படையாகவும் நேரடியாகவும் பெண்களைப் பாதிக்கின்ற அளவுக்கு ஆண்களைப் பாதிப்படையச் செய்யாது என்பது உண்மையே. எனவே இந்த விடயத்தில் மட்டுமல்லாது எந்த விடயத்திலுமே பெண்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும்.

பெண்களே, எம்மால் உங்களுக்குச் சட்டரீதியான பாதுகாப்பைத் தர முடியும். ஆனால் சட்டத்தை உங்களுக்கு ஆதரவாக நாம் பயன்படுத்துவதற்குரிய வகையில் நீங்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதையே நாம் உங்களிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

# சிறையிலிருக்கும் தோழிக்கு

1994. 03. 08 இல் நிகழ்ந்த அனைத்துலகப் பெண்கள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பால் நடாத்தப்பட்ட இலக்கிய, ஓவியப் போட்டிகளில் இரண்டாம் பரிசு பெற்ற கவிதை

உணர்வுகள் பொசுக்கப்பட்டவளாய்,
வெற்றுடலில் குருதிப் பிசுபிசுப்புடன்
நீ மயங்கிக் கிடக்கக் கூடும்.
தோழி!
ஒரே தாய்நாடு ஊட்டிய
பாலில்தான்
நீயும் நானும் ஜனித்து வளர்ந்தோம்.
வெறும் வார்த்தைகளுடனும்,
பேனா, தாள்களுடனும்,
அமர்ந்திருந்து,
நான் வெறிக்கும் நேரமெல்லாம்
எங்காவதொரு இருள் மூலையில்
பதுங்கிச் செல்லும் உன் காற்றடங்கள்.
இருட்டின் வீறிடலுக்குள்
நீ மௌனமாய் முன்னேறுவாய்.
''சீ பெட்டைக் கழுதை
வீட்டில் பூட்டிற்றிரு''
என்று அறிவுரை சொன்னவர்கள்
அடங்கியிருப்பார்கள்
உன் பாதுகாப்பினுள்.
இன்றும்
உன்னைச் சிறைப்படுத்த முடிந்தவர்களால்
உன் ஆன்மாவைச்
சிறைப் படுத்த முடிந்திராது.
அடிகளில் சிதைந்தும்
தினம் பொங்குகின்ற உன்கண்கள்......
இங்கே நாமோ
சட்டங்களினுள்ளும் சேலைகளினுள்ளும்
சிறைப்பட்டுக் கிடக்கிறோம்.
இனியும் எப்படி
காலத்துக்கு நாங்கள் கட்டுப்படுவது?
கற்றுக் கொடு தோழி!
உன் மௌன பாஷைகளால்
கற்றுக் கொடு— —
போராடுவது எப்படியென்று!!

-பவானி

## தகர்வுகள்

சிறகிருந்தும் பறக்காத
சிட்டுக்குருவி.
உயிரிருந்தும் உலவ
முடியாத உருவம்,
கரும்புகைக்குள்
கண்ணைக் கசக்கியே
கரியாகிப் போன கரு.

பூச்சாடிக்குள் மட்டுமே
வேர்பரப்ப கட்டளையிடப்பட்ட
ரோசாச்செடி- மலை
ஊற்றிருந்தும்
உருவெடுக்க முடியாது தடுக்கப்பட்ட
பேராறு.
என்ன நியாயமோ?

காற்று வீசி
நிலவெறிக்கக் கூட-இவர்கள்
கட்டளையிடுகிறார்கள்.
நேற்றுவரை இதுதான்.
நிலை ...
இன்றெல்லாம்
தோற்றுப் போனார்கள்
நிலவு நெருப்பாகி
காற்றுப் புயலாகி
கனத்த பின் தான்
விலகிக் கொண்டார்கள்.
ஓ! இது இப்படிக் கூட
இருக்குமோ?

திருமாறன்

## சாப வேர்கள்

என் கற்சிறையின்
சுவர்களின் ஈரத்துக்குள்
என் இளமைக்காலம்
அணைந்து அவிந்து போயிற்று
பொருளின் மதிப்பீடுகளுக்குள்,
என் சுயத்தைப்பற்றி,
என் உணர்வுகளின் இருப்பைப்பற்றி
யாரும் மறந்துங்கூட மதிப்பிட்டதாகஇல்லை
என் வாழ்க்கைபற்றிய தேர்வில்
என் சொத்துக்களின் மதிப்பீடு,
இழிவுப் புள்ளிகளாய், தோற்றுப்போனது
உட்குழிந்த விழிகளுக்குள்
என் வாழ்க்கையின் தேக்கம்
எப்போதும் போல இருண்டபார்வை
நீண்ட வரலாற்றின் படிகளில்
எங்கேனும் திருப்பங்கள்...
தடம்மாறி வரலாம்.
அப்போது சமுதாயத்தின்
சாப வேர்களில்
ஆணி அறையப்படலாம்.
அதற்காக என் காத்திருப்பு...
கற்பனையாய் அல்ல.

## என் தாயகம்

சுட்டெரிக்கும் வெயிலில் நிழல்தேடும்
கட்டெறும்பு நாம்தானே
நாம் தினம் வடிக்கும் கண்ணீர்
காட்டாற்று வெள்ளம் தானே.
துன்பத்தின் விழிம்பில் நின்று
விழிகலங்கி வாடுவதும் எம்
இனந்தானே,

## தமிழ் மண்ணை நேசிப்பீர்

உதயமாய் ஒளிரும் இம்மண்ணை நேசி
உணர்வுள்ள இம்மண்ணை என்றென்றும் நேசி
இதயமாய் இருக்கும் எழில் மண்ணை நேசி
இறையவன் வாழும் எம் மண்ணை நேசி

வேங்கைகள் வாழும் செம்மண்ணை நேசி
வேடத்தை எதிர்க்கும் வீர மண்ணை நேசி
[illegible]

இழப்புக்களையே இதயத்தில் தாங்கி,
இறந்த காலத்தை எண்ணத்தில்
ஏந்தி
மரத்துப்போன மானிடமாய்,
மண்ணிலே ஏங்கிடும் தமிழர்தம்
நிகழ்கால வாழ்வினை நிறைவாக்க
நிதர்சனங்களை கண்ணுற்று இன்புற
விடியலின் கீதத்தில்
விழித்திடும் எம் கருவிழிகள்
விரைவினில் காணவேண்டும்
விடிவு பெற்ற நாடு
அது எம் தாயகம்.

எதிர்கால கனவுகளை
எம் எண்ணத்தில் உருவேற்றி
பொருண்மியத்தில் உயர்
கொடியேற்றி
கல்வியிலே தனிக்கொடி நாட்டி
தரணியிலே புகழ்கொடி பறப்போம்
தங்கத் தமிழ் ஈழமது
என் இனிய தாயகம்.

கீதப்பிரியா

[...] எதிர்க்கும் வீர மண்ணை நேசி
ஆதிக்க ஆட்சியை அழிக்கும் மண்ணை நேசி
ஆவேசக் கும்பலை வெறுக்கும் மண்ணை நேசி

தலைவர் பிரபாவின் தமிழ் மண்ணை நேசி
தமிழன்னை அணைக்கும் அருள் மண்ணை நேசி
வற்றாத தியாகம் வழியும் மண்ணை நேசி
வளமான வளங்கள் நிறையும் மண்ணை நேசி

பாரத கூட்டம் வதைத்த மண்ணை நேசி
பாவலர் கூட்டம் பாடும் மண்ணை நேசி
பூபதி வாழ்ந்த புனித மண்ணை நேசி
புண்ணியவான் திலீபனின் அகிம்சை மண்ணை நேசி

காவியம் படைக்கும் கல்லறை மண்ணை நேசி
காவலாய்ப் புலிகள் இருக்கும் மண்ணை நேசி
குருதியது பொங்கும் உறுதி மண்ணை நேசி
குனிந்து நீ நிற்காது நிமிர்ந்து மண்ணை நேசி

மிருணா

அதற்காக என் காத்திருப்பு...
கற்பனையாய் அல்ல.
கற்களின் பொறிப்பாய்
வரையப்படும்.
'மனிதம்' மதிக்கப்படாத,
மாலை சூடலுக்கு
முடிவு கொடுப்போம்
கொண்டுவாருங்கள் அந்தச்
சீதனப்பத்திரங்களை!
கொழுந்துவிடும் தீநாக்குகளில்
எரித்துக்கொள்வோம்.

-மதி

---

வாசகர்களிடமிருந்து கருத்துக்கள் ஆக்கங்களை வரவேற்கின்றோம்.
தொடர்புகட்கு:

சுதந்திரப் பறவைகள் வெளியீட்டுப் பிரிவு
கோண்டாவில்

# புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்